# ஸ்கந்தவரோதயக் கல்லூரி

## நூற்றாண்டு விழா

பழைய மாணவர் சங்கம் - கொழும்பு.




# Skandavarodaya College

## Centenary Celebration

Old Students Association - Colombo.

*With Best Compliments*
*of*

# *Veytex*

A name woven into the life of 100% cotton fabrics.

Manufacturers of a wide range of Printed

Dyed & Bleached fabric for any occasion as it demands

| | | | |
|---|---|---|---|
| Head Office & Show Room (Bambalapitiya) | | : | 323, Galle Road<br>Colombo 4. |
| Show Room | (Pettah0 | : | 54, Bankshall street,<br>Colombo 11. |
| ShowRoom | (Kandy) | : | 105, Kotugodella Vidiya,<br>Kandy. |
| Factory | | : | Bandaranayake Road,<br>Veyangoda. |

1994

# யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# J/SKANDAVARODAYA COLLEGE

1894

# கல்லூரிக் கீதம்

1. போற்றிசெய் வோம் எங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி.
(போற்றி)

2. ஸ்கந்த வரோதய எங்கள் கல்லூரி
சந்தத மும்புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே.
(போற்றி)

3. ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரும் இங்கே.
(போற்றி)

4. பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்!
உறவென்றும் நீயே உண்மையோ டுனக்கா(க)
உழைத்திடு வோமென்றும் நாமே.
(போற்றி)

5. எந்தை யெனத்தகு **கந்தைய** வள்ளலின்
சிந்தையி லெழுந்தகல் லூரி
செந்தண்மை மருத்துவன் **சுப்பிர மணி**யனின்
சேவையில் உயர்ந்தகல் லூரி
சேவையில் உயர்ந்தகல் லூரி
சேவையில் உயர்ந்தகல் லூரி
சேவையில் உயர்ந்தகல் லூரி
(போற்றி)

6. வாழிய வாழிய எங்கள்கல் லூரி
வளமலிந் தோங்கியே என்றும்
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
வளரிள மதியெனவே
வாழிய எங்கள்கல் லூரி
(போற்றி)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம். கொழும்பு

அளிக்கும்

கல்லூரியின்

# நூற்றாண்டு விழா

(1894-1994)

| | |
|---|---|
| இடம் | ; இராமகிருஷ்ணமிஷன் மண்டபம், வெள்ளவத்தை |
| காலம் | ; 4-12-1994, ஞாயிற்றுக்கிழமை, மாலை 5.00மணி |
| பிரதம விருந்தினர் | ; மாண்பு மிகு சபா நாயகர்- கே.பி. இரத்னாயக்கா பா.உ. அவர்கள் |

## Skandavarodaya College

**Old Students Association , Colombo.**

# Centenary Celebration

**(1894 - 1994)**

at

**Ramakrishna Mission Hall, Wellawatte.**

on

**Sunday 4th December 1994**

at

**5.00 P.M.**

Chief Gust

Hon. Speaker **K.P. Ratnayaka**, M.P.

# SKANDAVARODAYA COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION - COLOMBO

## Executive Committee

| | | |
|---|---|---|
| Dr. A. Shakthivale | - | PRESIDENT |
| Mr. T. Ananda Baskaran | - | SECRETARY |
| Mr. P. Suntharalingam | - | TREASURER |
| Mr. S. Pathmanathan | - | VICE PRESIDENT |
| Mr. B. Sri Ratnam | - | VICE PRESIDENT |
| Dr. P. Kandasamy | - | ASST. SECRETARY |
| Mr. K.P. Aravinthan | - | COMMITTEE MEMBER |
| Mr. A. Ragupathy Balasridharan | - | " " |
| Mr. S. Mahendran | - | " " |
| Dr (M/s) S. Thanaphalasingham | - | " " |
| M/s. S. Vishnukanthan | - | " " |
| Mr. K. Sachithanandar | - | EDITOR. |

## Centenary Committee

| | | |
|---|---|---|
| Mr. A. Ragupathy Balasridharan | - | CHAIRMAN |
| Mr. M. Sukumaran | - | MEMBER |
| Mr. M. Koneswaran | - | " |
| Mr. S. Mohanadas | - | " |
| Dr. K. Sivakumar | - | " |
| Mr. K. Thayalan | - | " |
| Mr. R. Logendhiran | - | " |
| Mr. K.P. Nadanasigamany | - | " |
| Mr. V. Vazavan | - | " |

## MESSAGE FROM

# Her Excellency Chandrika Bandaranayake Kumaratunga

## President of the Democratic Socialist Republic of Sri Lanka



It gives me great pleasure to write this message on the occasion of the Centenary Celebrations of the Skandavarodaya College, Chunnakam-which is one of the leading educational institutions in the north.

An educational institution, which has withstood the trials & tribulations of a 100 year period and imparted an excellent education to thousands of its students, deserves commendation by one and all.

No time is more appropriate than the present to deliberate on the valuable services rendered by this college and to wish the institution many more centuries of dedicated service to students.

On this historic occasion, I wish the Old Students, the Principal, Staff, and the Present Students of the College every success.

Her Excellency Madam Chandrika Bandaranayake kumaratunga

MESSAGE FROM

# THE PRIME MINISTER



It gives me great pleasure to send a message to the souvenir which is being published by the Skandavarodaya College Old Students' Association-Colombo to mark the Centenary Celebrations of the school.

Hundred years as one of the leading Colleges in the North, in the field of education is undoubtedly a remarkable occasion and one that justifies celebrations.

I wish the College and its Old Students' Association continued success and a bright future.

Hon.Mrs.Sirimavo R.D. Bandaranayake

# MESSAGE FROM THE SPEAKER



Skandavarodaya College, Jaffna has,during its hundred proud years, served our Nation well by bringing the light of learning to many thousands of children from all walks of life, the rich and the not so rich, the poor and the down trodden. And it has done the Nation proud in producing from among them distinguished men in many a profession who have proved their worth not merely in Sri Lanka but in many different climes of the World.

On the happy occasion when Skandavarodaya is about to take its first step into its second century I take great pride in wishing it more successes in the years ahead.

Hon.K.B.Ratnayake

# Message From Late ORATOR SUBRAMANIAM to us on the inaugural day of our O S A



I am very happy to know that the old students of Skantha Varodaya College in Colombo are meeting on the 20th of October to inaugarate an an Old Students Association. I intend going to Colombo in December and I thought that I would, when there, get together the Old Students to form an association. You have forestalled me; you will be making it easier for me to meet you all in a body when I am in Colombo. Two attempts were made i previous years to start an O.S.A in Colombo. In 1945 we had an association with the late K.S. Arulnandhi as president. We met twice or thrice. In July 1969 Mr. N.S. Kandiah got together the Old Students in Colombo to celebrate the 75th anniversary of the college, and to bid farewell to Mr. V. Sivasubramanium, who had just then retired. The function was held in Ceylinco Hotel and was a grandone. Many distinguished educationalists spoke on the sterling services of principal V. Subramanium

It was really a function to fate him. Thereafter there was no Skantha O.S.A. in Colombo. This is your third attempt and I hope it would not be as abortive as others. In 1986 the old students in U.K. started the Sknatha O.S.A. Thanks to the splendid organising ability of Mr. N.S. Kandiah, there have been annual celebrations the last seven years. Their committees met in between. This year, they are going to honour Mr. Kandiah by making him the chief guest for the 1993 get-together, and thus showing their gratitude for his meritorious services. In 1991 the Old students in Canada inaugrated an O.S.A. at which I was present. In 1992 they celebrated my 90th birthday and they published a book titled Garland of Tributes. This year, on the 5th of August, they had a full days programme in a park. There were nearly 300 Old students and their spouses. There was a cricket match with Mahajana College, a sports meet, lunch and tea-Prizes were distributed. They decided to institute scholarships for Skantha students going to university from Skantha. The old students in Paris are trying to start an O.S.A. there. The parent O.S.A. in Jaffna has been functioning very efficently for many years, with Mr. A. Mahalingam as president and Mr. Sethu Vipulananda as Secretary.Their annual report for 1991-1992 speaks for itself. They have made substantial collections for the college. They have a credit balance of nearly two lakhs. They have instituted scholarhsips and have very ambitious building plans to celebrate the centenary of the college next year. Mr. S. Paramanathen, who secured a grant of eight lakhs from the Government and put up a one storeyed block to house the laboratories, is keen to put up a three storeyed Centenary block. We hope the new Colombo O.S.A. would join them in fulfilling their plans. We are proud of Skantha's achievements. Skantha established an ethos of helping students from disadvantaged homes and giving them an excellent all around education. We have many Firsts' to our credit. It is not possible to recount all of them here. Super grade along with Jaffna Hindu and Jaffna College, and 12 other , first Hindu English school to admit minority Tamil students both to the school and to the hostel, holding of double sessions to accomodate growing numbers. These are some of them I am happy to send my good wishes to you who are gathered today to meet and greet each other and re-live the happy-go-lucky days of old. It will be a glorious experience and I am sure I would be in your thought today, while I cherish memories of my dear Old Students. May your O.S.A. go on for ever. May God bless you all.

Hartlepool
United Kingdom
10-10-1993

10.10.1993
C. Subramanium



## PRESIDENT'S MESSAGE

Skandavarodaya College was founded in the year 1894 under the name "Kanthorodai English School". After it was taken over by the government in 1960 the school was able to accommodate and impart education to nearly 2000 students. We are happy and proud that our Alma Master, which gage us the wealth of knowledge is celebrationg her Golden Jubilee, on this day.

When we look back, we cannot fail to observe the changes that have taken place and the progress that has been made in every sphere. Today, thousands of past pupils are holding high positions both here as well as abroad. Not only in education, but in the field of sports too we have achieved the highest distinction, which will no doubt provide an encouragement to our younger generation.. The recognition given to Music, Dancing, Drama & Rural Arts by the College cannot be described in words.

Hundreds of teachers taught us at Skanda. A teacher who is an expert in a particular field was chosen to teach the respective subject. Teh period during which the late - Orator C. Sunbramaniam functioned as Principal, was the "Golden Era" of our College. He was an example and a model not only to all the teachers but also to the students.

While celebrating the Centenary year of our college, we must think in what way we could repay our debts to this institution. There are many bright students who are unable to continue their studies due to lack of funds. It is our duty to help them. Having this in mind we are today inaugurating the "Orator Subramaniam Memorial Scholarship Fund". We are sure that you will all contribute lavishly and whole heartedly towards this.

Our College is also in need of many facilities. It will be too much to expect the government to provide all what the college needs. Funds are required to purchase stationery, sports materials, equipment, library books etc. We request your kind co-operation in this respect too, in cash or in kind.

Teachers, are expected and called upon to play a prominent role in the education of our children. It is against any human concept to "market" knowledge. The present trend is to conduct tuition classes as a source of income. We humbly request all the teachers at Skanda, not to create a situation, where a student is compelled to attend a tuition class, which was not the case when we studied there. Your endeavor should be to make every student a good citizen and make Skanda sshining "star", in the Northern sky. Be assured that our Association will provide all the possible help and assistance towards this effort.

Dr. A. Shakthivale
(President, O.S.A. ,Colombo)

# சுன்னாகம் பழைய மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

நாம் ஸ்கந்தா அன்னையின் பிள்ளைகள். பல புத்தி ஜீவிகளை உருவாக்கிய எமதன்னை தனது நூற்றாண்டில் கால் பதிக்கும் வேளை எமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. இதே வேளையில் எமது கொழும்புக் பழைய மாணவ சங்கத்தினர் மலர் ஒன்றினை வெளியிட முன் வந்துள்ளனர். இச் செய்தியினை அனுப்புவதில் மிகவும் பூரிப்படைகின்றேன்.

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னெடுத்துச் செல்லும் வேளையில் எமது சங்கம் இரு போஷகர்களை இழந்துள்ளது. இவ் வெற்றிடங்கள் நிரப்பமுடியாதவை. இதில் ஒருவர் அமரர் சி. சுப்பிரமணியம் (ஒரேற்றர்), ஆவார். மற்றவர் அமரர் பொன். நாகரத்தினம் ஆவார். இவர்கள் இன்னும் சிறிதுகாலம் வாழ்ந்திருந்தால் எமது நூற்றாண்டு விழா மேலும் சிறப்புப் பெற்றிருக்கும்.

ஒரேற்றர் ஐயா அதிபராக இருந்த காலம் எமது கல்லூரியின் பொற்காலம் எனக் கூறுவது மிகவும் பொருத்தமாகும். இக்காலத்தில் எமது பாடசாலை பல துறைகளிலும் முன்னேற்றத்தைக் கண்டதுடன் அதியுயர் தரத்தையும் பெற்றது. இதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது, அமரர் நாகரத்தினம் அவர்கள் எமது பாடசாலையில் மாணவனாகவும், ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும் பல வருடங்கள் இருந்து பாடசாலையின் அபிவிருத்திக்கு அரும்பணியாற்றினார். இவர்களது மறைவு எமக்கு பேரிழப்பாக இருந்த போதிலும் ஸ்கந்தா அன்னையின் எஞ்சிய பிள்ளைகளாகிய நாம் அவர்களது பணியினைத் தொடருவது மிகவும் அவசியம்.

பழைய மாணவர்களாகிய நாம் அமரர் சுப்பிரமணியம் அவர்களின் 31வது தினத்தை பிரார்த்தனை, மலரஞ்சலி, இரங்கல் உரைகள், மதிய போசனம் முதலியவற்றுடன் கொண்டாடினோம். அமரர் நாகரத்தினத்தின் இறுதி யர்த்திரையில் கலந்து எமது அஞ்சலியைத் தெரிவித்தோம்.

உலக ஆசிரிய தினத்தை எமது சங்கம் 1993.10.06ஆம் திகதி மிகவும் சிறப்பாக கொண்டாடியது. அத்துடன் அமரர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் பி.எஸ். அவர்களின் நினைவுப் பேருரையை எமது பழைய மாணவர்கள் இருவர் சென்ற ஆண்டு ஆற்றினார். இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கிடையே ஒரு கட்டுரைப்போட்டியையும் நடாத்தினோம். இதன் பெறுபேறுகள் அதிபரிடம் பெற்றதும் பரிசில்கள் வழங்க உள்ளோம். 1994ம் ஆண்டின் ஆறாம் ஆண்டில் அனுமதி பெற்ற மாணவர்களுள் ஐந்தாமாண்டு இறுதிப் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களின் விபரம் பெற்றதும் இவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கவுள்ளோம்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்புகள் அமைவது மிகமிக அவசியமாகக் கருதப்படுகின்றது. எல்லாச் சக்திகளும் ஒன்றிணைந்து இவ் வகுப்புக்களை ஆரம்பிக்க எடுத்த நடவடிக்கைகள் யாவும் நாம் எதிர்பார்த்த பலன் தராதது மிகுந்து வேதனனைக்குரிய விடயம் ஆகும். ஆகவே எமது அன்னையின் வளர்ச்சிக்காக அன்னையின் அன்புச் செல்வங்கள் அனைவரும் தத்தமது வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு இப்பணியில் ஒன்றுபடுதல் வேண்டும். அப்போதுதான் எமது பாடசாலையில் பாரிய முன்னேற்றத்தைக் காணக் கூடியதாக இருக்கும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

நுற்றாண்டு விழாவுக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தை வர்ணம் தீட்டி அங்கு அதிபர்கள் யாவரினதும் படங்களும், பெயர்கள், காலங்கள் காட்டும் பலகைகளும் தொங்கவிடப்பட வேண்டும் எனவும் இப்பணியை எமது சங்கம் நிறை வேற்றவேண்டும் என்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

நூற்றாண்டு விழாவினை நாம் ஒன்றுபட்டுச் சிறப்பாகக் கொண்டாட எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமான் அருள் புரிய வேண்டும் என வேண்டுகின்றேன்.

நன்றி.

வை. இராசையா
தலைவர்,
பழைய மாணவர் சங்கம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.



# Principal's Message

It is indeed a great pleasure to me to contribute this message to the Souvenir which is being released by the Old Students' Association of Skanda Varodaya College Colombo , to commemorate the Centenary year celebrations of Skanda Varodaya College, Chunnakam.

This Centenary year is a notable one in the history of any institution. Our college was founded by late Kandiah Uppathiyayar in 1894. It was fostered by late Dr. S. Subramaniam popularly known as P.S.

During its long years of existence thousands of students have been influenced and fashioned by the ideals at this institution. It has moulded the characters of young students to lead disciplined, dedicated and useful lives. As a result we are very glad in that many of our alumi are holding responsible positions others are engaged in advancing and disseminating the Tamil and Hindu tradition, culture and art in the country.

Several eminent Principals and teachers have served in this institution but the Golden Era of Skanda was when late Orator C. Subramaniam served our College as the Principal. He started his career in 1944 and retired in 1962. During his period our college was upgraded as a Grade I college in 1952 and in 1957 it was upgraded as a Supra Grade College.

The President of the Skanda Varodaya College Old Students' Associaiton, Colombo and his efficent Committee have been rendering a valuable service to develop our College. They have made the necessary arrangements to release a Centenary Stamp and we are really happy that they are trying their best to upgrade Skanda as a National college.

I wish you all success in your endeavours to foster our College and I am confident Lord Skanda will shower his grace on the school to ensure success in all its future activities.

*Mr. A. Kamalanathan B.A. (Cey), Dip. in Ed. S.L.P.S. Grade I,*
*Principal J/Skandavarodaya College.*

# பிரதி அதிபரின் செய்தி



உ

ஸ்கந்தன் துணை

"உண்மையே உயர் அறம்" என்ற உயர்ந்த குறிக்கோளுடன் விளங்கிவரும் எமது அன்னை ஸ்கந்தா, தனது குலதெய்வமாகிய ஸ்கந்தன் திருவருளால் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் நூற்றாண்டு மலர் ஒன்றினை வெளியிட எடுத்த முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

இக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் மாணவனாகவும் உதவியாசிரியர், பகுதித்தலைவர், பிரதியதிபர் பதவிகளில் இருந்து இருபத்தொரு ஆண்டுகளாகப் பணியாற்றி வருவதனால் எமது அன்னையின் வளர்ச்சிப் பருவங்களை நன்கறிவேன். எனவே நூற்றாண்டு மலர்க்காக செய்தியினை வழங்குவதில் பெருமையடைகின்றேன். எமது கிராமத்தின் விடிவுக்கு கலங்கரை விளக்காகத் திகழ்ந்து ஒப்பற்ற பணியால் கல்லூரியை ஸ்தாபித்த கந்தையா வள்ளலை நினைந்து வணங்குகிறேன். செந்தமிழ் மருத்துவனாய் சேவையாளனாய் கல்லூரித் தூணாக விளங்கிய டாக்டர் சுப்பிரமணியம் அவர்களது அயராச் சேவையைப் போற்றுகின்றேன். கிராமப்புறப் பாடசாலையாகவிருந்த ஒரு கல்வி நிலையத்தினை அகில இலங்கைப் பாடசாலைத் தரத்திற்கு உயர்த்தி ஸ்கந்தாவின் புகழ் விளங்க உழைத்த உத்தமன் அமரர் சி. சுப்பிரணியம் (ஒறேற்றர்) ஆவர். இவரின் வலக்கரமாக முன்னாள் அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்களையும் அவர்களுடன் இணைந்து செயலாற்றி வெற்றிகண்ட அமரர் க. சிவகுமாரன் அவர்களையும் எம்மால் மறக்க முடியாது. இவர்களைப் பின்தொடர்ந்து ஆற்றல்மிகு அதிபர்களும் ஸ்கந்தாவின் வளர்ச்சியில் தம்மாலான பணிகளை ஆற்றியுள்ளனர்.

புகழ்பூத்த எமது அன்னையின் மக்கள் இன்று உலகில் பல்வேறு நாடுகளிலும் தாம் பெற்ற கல்வியின் பயனாய் உயர்பதவிகளில் மகிழ்வுடன் வாழ்ந்து வருவது எமது கல்லூரிக்கு மேலும் பெருமையைத் தருகிறது. அவர்கள் எங்கிருந்தாலும் தமது தாயை மறவாது ஆற்றிவரும் சேவைகள் போற்றற்குரியன. பழைய மாணவர்களே ஒரு கல்லூரியின் தூண்கள் ஆவர். இவ்வுண்மையைத் தொடர்ந்தும் நிலைநாட்டுவீர்கள் என நம்புகின்றேன்.

வளரிள மதியெனவே வாழிய எங்கள் கல்லூரி!

க. புவனேந்திரநாதன் S.L.P.S.II
(பிரதி அதிபர்)

# பல்லாயிரம் ஆண்டு வாழ வாழ்த்துகிறார்

– நூற்றாண்டு விழா குழுத் தலைவர் –



செந்தமிழையும் சைவத்தையும் வளர்க்கவென 1894ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, இவ்வாண்டு தனது நூற்றாண்டு விழாவைப் பெரு விமரிசையாகக் கொண்டாடுகிறது என்பது எம்மைப்போன்ற கல்லூரியின் பழைய மாணவருக்கு மாத்திரமல்ல; தமிழ் கூறும் நல்லுலகத்துக்கே பெருமையும் பெருமகிழ்ச்சியும் தரக்கூடிய ஒன்றாகும்!

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தமிழ்த் தெய்வம் முருகனைத் தலைவனாகக் கொண்டு 'ஸ்கந்தா' என்ற பெயருடன் கந்தையா உபாத்தியாயரால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி!

மகாத்மா காந்தியின் வருகையால் மகிமை கொண்ட கல்லூரி!

ஒரேற்றர் சி. சுப்பிரமணியம் ஐயாவினால் ஒளியேற்றப்பெற்று, ஓங்கு புகழ் கொண்ட கல்லூரி!

உதைபந்தாட்டமா, கிரிக்கெட் ஆட்டமா, அல்லது உடல் விற்பன்னர் போட்டியா – முதலிடம் ஸ்கந்தாவிற்கு!

பொறியியலாளர்கள், வைத்திய கலாநிதிகள், கணக்காய்வாளர்கள், வங்கியாளர்கள், எழுதுவினைஞர்கள், மருத்துவ தாதிகள், ஆசிரியர்கள் என்றெல்லாம், என்னென்ன துறைகள் வேண்டுமோ அந்தந்தத் துறைகளில் எல்லாம் மாணவ மணிகளை ஆண், பெண் என்ற பேதமின்றி நாட்டிற்குத் தந்தது ஸ்கந்தா!

எனது மாணவ பருவத்தில் கல்லூரிப் பரிசளிப்பு விழாவொன்றில் 'ஒரேற்றர்' தலைமை வகித்து ஆற்றிய சொற்பொழிவில் ஒரு துளியை இவ்விதழில் நினைவுகூர ஆவற்படுகிறேன்.

"இக் கல்லூரியில் கல்வி கற்கும் அனைவருமே பொறியியலாளர்களாகவோ அன்றி மருத்துவ கலாநிதிகளாகவோ வருவது என்றுமே சாத்தியமில்லை. எமது கல்லூரியோ இந்நாட்டிற்குத் தேவையான அளவு பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கணக்காய்வாளர்கள், எழுதுவினைஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவதாதிகள், வங்கியாளர்கள் என எதுவாயினும் ஆயிரம் ஆயிரமாகத் தரும்!"

எவ்வளவு பொருள் செறிந்த உண்மையான கூற்று! எவ்விடம் சென்றாலும், எந்தத் திணைக்களங்களுக்குச் சென்றாலும் அங்கு ஸ்கந்தா பழைய மாணவர் ஒருவரை எப்போதும் சந்திக்கலாம், இது உறுதி!

அன்று 'ஸ்கந்தா'வின் பொற்காலம் என்றொன்று இருந்தது! சற்று மங்கியுள்ளது இன்று! நூற்றாண்டு விழா கொண்டாடும் இவ் வேளையில் மீண்டும் 'ஸ்கந்தா'வின் பொற்காலத்தை ஆரம்பிக்க நாமனைவரும் சபதமெடுப்போம்!

எமது ஸ்கந்தாவை – வாழ்த்த எண்ணுவதோ அழகாக!
வார்த்தை வருவதோ குறைவாக!
எனினும்
வாழ்த்துகிறோம் நெஞ்சார!

**ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்,**
**(தலைவர், நூற்றாண்டு விழாக் குழு)**

உ
ஸ்கந்தன் துணை
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கனடா கிளை

SKANTHA VARODAYA COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION
(CANADA BRANCH)

TEL. NO: (905)566-4822

SKANTHA-OSA(Canada Branch)
50 Elm Drive E. Apt. 1008
Mississauga, Ontario
Canada
L5A 3X2

....................................19........

President:
Mr. T. Visuvalingam

Vice-President:
Mr. S. Chitsabesan

Secretary:
Mr. Anton K.Sandrasagra

Asst. Secretaries:
Mrs. T. Vickramavarathan
Mr. T. Mylvannan

Treasurer:
Mr. C. Vairavanathan

Asst. Treasurer:
Mr. K. Navaratnam

Committee Members:
Mrs. V. Kandiah
Mr. E. Venugopalan
Mr.K. Vijayaratnam
Mr. C. Rajaratnam
Mr. K. Sarvananthan
Mr. S. Amarakone
Mr. C. Sockalingam
Mr. A. Vadivel
Mr. P. Ratnasingham
Mr. S.Gnanaskandan
Mr. K. Karunakaran
Mr. K. Balakirishnan
Mr. M. Vasavithasan
Mr. S. Sathikumar
Mr. P. Paramanathan

## வாழ்த்துச் செய்தி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நூற்றாண்டினை (1894 –1994) ஒட்டி விழாவொன்றினை கொழும்பு ப.மா.சங்கக் கிளையினர் நடத்துவது அறிந்து இவ்வாழ்த்துச் செய்தியை கனடா ப.மா.சங்கக் கிளையினர் சார்பில் அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஸ்கந்தாவின் நூற்றாண்டினை கொண்டாடும் இவ்வேளையில், கல்லூரி ஸ்தாபகர் சைவப் பெருந்தகை அமரர் கந்தையா உபாத்தியாயர் அவர்களையும் கல்லூரியின் தேவைகளுக்கு அவ்வப்போது பெரும்பொருள் அளித்த கொடைவள்ளலும், கல்லூரி முகாமையாளருமான வைத்திய கலாநிதி பி.எஸ்.சுப்பிரமணியம் அவர்களையும், கல்லூரியை இலங்கையின் அதி உயர்தரக் கல்லூரிகளில் ஒன்றாக உயர்வடைய உழைத்த புகழ் பூத்த அதிபர் அமரர் ஒரேற்றர் சி.சுப்பிரமணியம் அவர்களையும், மற்றும் கல்லூரியின் உயர்விற்காக உழைத்து அமரர்களான அதிபர்கள், ஆசிரியப்பெருமக்கள் ஆகிய அனைவரையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து நன்றிகூறி வணங்குகின்றோம். கல்லூரி அன்னையின் புகழ் ஓங்கிட கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் சாதனைகள் புரிந்திட அரும்பாடுபட்ட அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றியும் வாழ்த்தும் கூறுகிறோம்.

இன்றைய போர்ச் சூழ்நிலையில் நிரந்தரமான அமைவிடத்திலே கல்லூரி இருந்தபோதிலும், போதிய ஆய்வுகூட உபகரண வசதியின்மை, விளையாட்டுஉபகரணங்கள் இன்மை, தகுதிவாய்நத ஆசிரியர் இன்மை, போதிய தளபாடமின்மை ஆகிய பற்றாக்குறைகளினால் கல்லூரி நிர்வாகம் கஷ்டப்பட்டு இயங்கிவருகின்றது. முன்னைய காலங்களில் ஆசிரியர்களைக் கல்லூரி நிர்வாகம் நியமித்து, ஆவன செய்வதற்கு கல்வித்திணைகளம் அனுமதியளித்தது. ஆனால் இப்போது அவ்வாறு அனுமதியில்லை. மாணவர்களுக்கு இரவில் படிக்க விளக்குகள் இல்லை, போதிய நூல்கள், மற்றும் உபகரணங்கள் இல்லை. பல இன்னல்களுக்கிடையேயும் ஸ்கந்தா மாணவர்கள் சாதனைகள் புரிகின்றனர். அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

எனவே ஸ்கந்தா ப.மா.சங்கங்கள் கல்லூரியின் உடனடி, நீண்டகாலத் தேவைகளைக் கவனிக்க முன்னின்று உழைப்போமாக.

நீங்கள் எடுக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அன்னையின் நூற்றாண்டு விழா சிறப்புற நிகழ்ந்திட ஸ்கந்தன் திருவருளை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

தி. விசுவலிங்கம்,
தலைவர்.

27.09.1994.

# SKANDA VARODAYA COLLEGE OLD STUDENTS ASSOCIATION (UK)

I have pleasure, on behalf of the UK branch, to send our message of good wishes to Skanda Varodaya College Old Students Association (Colombo branch), on the occasion of the publication of a magazine to commemorate the College's first century of service to the community.

I am sure, every body who had ties with this great school would agree that the school owes a lot to the great "Kandiah Upathiyayar", our Founder, and the Triple Stars "Subramaniams" comprising the late Dr. Subramanium - Physician, philanthropist, philosopher and School Manager; our Emeritus Principal Orator C. Subramanium, and our Emeritus Vice Principal and Principal Mr. V. Sivasubramanium.

The aforementioned were the architects of the advancing Skanda of the fifties, sixties and seventies with its glorious achievements in the field of academic excellence and sports prowess.

The old students, whatever their current attainment, will always have an abundance of goodwill, admiration and respect for their alma mater and I join them in saluting her for her service to the community over the past one hundred years.

The village school, founded by Kandiah Upathiyayar in 1894 has blossomed forth into a fully fledged national institution - "The Skanda", and I am proud like many of you to be an old student.

Amidst Skanda's Century celebrations it is with sadness that we record the passing away of our Emeritus Principal Mr. C. Subramanium earlier this year, affectionately known to many as "Orator".

The growth of the College has in no small measure been due to his fervent devotion, great organising ability and indefatigable energy. Even during his peirod of retirement he had been a tower of strength and a willing ambassador not only to the College but also to the Old Student Associations of Jaffna, Colombo, Canada, and here in the UK.

As Old students we have a duty both by our teachers, past and present, and to our school, to work together for the greater glory of Skanda for all it has sowed in us. I wish your branch and the School, deserved success in it's Century celebrations and may the next hundred years see a continuation of Skanda's proud past.


**S. Kanagasabai**

President - Skanda Varodaya College Old Students Association
U.K. Branch.
101 Thamesdale, London Colney, Herts AL2 1TB, UK.



# இளைப்பாறிய அதிபரின் ஆசிச் செய்தி

ஸ்கந்த வரோதயாக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சம்பந்தமாக கொழும்பு பழையமாணவர் சங்கத்து சிறப்பு மலர் ஒன்றை, வெளியிடுவதாக அறிந்து மிக மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனெனில், இக்கல்லூரியால் பயனடைந்தவர்களுள் யானும் ஒருவன். அதாவது, நான் இக்கல்லூரியில் 5 வருடங்கள் மாணவனாகவும், 15 வருடங்கள் உதவி ஆசிரியராகவும் 19 வருடங்கள், துணை அதிபராகவும், 7 வருடங்கள் அதிபராகவும் பணிபுரிந்து, மொத்தமாக 46வருடகாலமாககல்லூரியின் ஏற்றத்தாழ்வுகளையும்இன்பதுன்பங்களையும் கண்டுள்ளேன். இது ஒரு சாதனையென எண்ணத் தோன்றுகிறது. ஆகவே நான் ஒரு ஆசியுரை வழங்குவதும் பொருத்தமானதாகும்.

உயர் திரு கந்தையா உபாத்தியாயரால் 1894 ஆம் வருடம் நிறுவப்பட்ட இக்கல்லூரி படிப்படியாக வளர்ந்து பெரிய விருட்சமாகி ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு நிழல் கொடுத்து, அறிவை வளர்த்துப் பொருளாதார முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக விளங்குகின்றது.என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். (சில வேளைகளில் சிறுச்சிறுத் தாழ்வுகள் ஏற்பட்டிருக்கலாம்) சென்ற 50 வருட காலமாக கல்லூரி எய்திய வளர்ச்சியைப் பற்றி இங்கு சுருக்கமாகக் குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

1944ஆம் வருடம் தை மாதம் அண்மையில் காலஞ்சென்ற திரு சி. சுப்பிரமணியம் (Orator)அவர்கள் அதிபராகவும், யான் துணை அதிபராகவும் நியமிக்கப்பட்டோம். அப்பொழுது ஏறக்குறைய 400 மாணவர்கள் கல்வி பயின்றனர். 15 ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர். படிப்படியாக இத் தொகைகள் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதுகளில் 2237 உம் 67 ஆயின. அதிபரும் யானும் விசுவாசமாக ஒத்துழைத்து மற்றும் கல்லூரி ஆசிரியரின் பேருதவியுடன் கல்லூரியின் வளர்ச்சியைக் கண்டோம். 1947ஆம் வருடம் முதல் யான் இளைப்பாறும் வரையும் (1969) கட்டடங்களைக் கட்டுவித்தோம். வகுப்பறைகள், விடுதிச்சாலை, போசனசாலை, நூல்நிலையம் விஞ்ஞான கூடம், முதலியவற்றை ஸ்தாபித்தோம். விளையாட்டு மைதானத்தை அமைத்து அதன் கரைகளில் நிழல் மரங்களை நாட்டினோம். இவைகள் எல்லாவற்றையும் செய்து முடிக்க வேண்டிய செலவை 1955ஆம் வருடம் நாம் நடத்திய "கார்ணிவேல்" மூலமும் வைத்திய கலாநிதி சி. சுப்பிரணியமிடமிருந்தும் பெற்றோம்.

இவற்றின் பெறுபேறாகக் கல்வித்தரம் உயர்ந்தது. பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்புற்று விளங்கின. கல்வித்துணை முயற்சிகளும் சிறப்புற்று விளங்கின. கல்லூரித் தரமும் உயர்வுற்றது. (கல்லூரி உயர்தர அந்தஸ்த்தைப் பெற்றது) இம் முன்னேற்ற காலங்களின் ஆரம்ப காலத்திலே வாழ்ந்த நிறுவினர், சி. கந்தையா உபாத்தியாயர், அக்காலத்திலேயே இவ் வளர்ச்சிகளைக் கண்டு களித்துத் தம்முடைய கனவு நனவாகியது என்று ஆனந்தக் கண்ணீர் விட்டார். (அவர் சிவபதமடைந்த வருடம் 1952 ஆகும்.)

இப்பொழுது ஸ்கந்தாவின் பழைய மாணவர் சங்கமும் அதன் கிளைகளும் - கொழும்பு, கனடா, லண்டன், முதலியன – கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பாடுபடுகின்றன. கல்வியைத் தன் முழு மூச்சாகக் கொண்டு இயங்கும் எமது சமுதாயம், "கேடில் விழுச் செல்வம் கல்வி என்றும்", "கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே", என்றும் கல்வியை உயர்த்தி மதிக்கின்றது.

ஆகவே, ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் வெளியிடவிரும்பும் நூற்றாண்டுவிழா மலர் நன்றாக அமைய வேண்டுமென்றும் நற்பலனை அளிக்க வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன். இப்பணியில் ஈடுபட்டுள்ள பழைய மாணவர் சங்கத்தாரின் அயராத கல்வித் தொண்டு தொடர்ந்து பிரகாசிக்க எனது இதயங்கனிந்த ஆசியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

– திரு. வி. சிவசுப்பிரமணியம்
(இளைப்பாறிய அதிபர்)

## SOUVENIR COMMITTEE

Mr. P. Suntharalingam - Chairman
Mr. B. Sriratnam
Mr. A. Ragupathy Balasridharan
Mr. K. Sachithanandar
Mr. K. Thayalan

## இதழாசிரியர் குழு

திரு பொ. சுந்தரலிங்கம் - தலைவர்
திரு B.ஸ்ரீரட்ணம்
திரு ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்
திரு க. சச்சிதானந்தர்
திரு K. தயாளன்

# ஸ்கந்தா என்றும் உயர்ந்திடும் - நூற்றாண்டு வரலாறு

சேது விபுலானந்தா -
செயலாளர், பழைய மாணவர் சங்கம், சுன்னாகம்

நெல் வயல்கள் சூழவும், வழுக்கி ஆறு வலம் வரவும், தென்னை மரச்சோலைகளும், பனங்கூடல்களும், மருதமரச் சோலைகளும் இதந்தரவும் அமைந்ததுதான் கந்தரோடைப் பதி. இங்கு கோயில்களின் மணிகள் ஒலித்தன. ஆனால் கல்விச்சாலை அமையாத காலம். இந்நிலையை தீர்க்கும் வகையில் கந்தரோடைக் கிராமத்தில் வசித்த பிரபல தனவந்தரும் அதிகார புருஷருமாகிய திரு. வேலுப்பிள்ளை முதலியார் முத்துவேற்பிள்ளை (அப்பாத்துரை) அவர்கள் தமது சொந்த நிலத்தில் கந்தரோடைக் கிரமத்தில் தமிழ், ஆங்கில பாடசாலையை 1892ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். திருவாளர்கள், சின்னத்தம்பி கந்தையா உபாத்தியாயரும், அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயரும் முறையே ஆங்கிலமும் தமிழும் கற்பித்தனர். இருந்தும் திரு. வே.முத்துவேற்பிள்ளை (முன்னோடி) அவர்கள் தமது முயற்சியில் அதைரியமும் மனச் சோர்வும் அடைந்து கைவிட முன் வந்தார்.

இந்த நல்ல காரியத்தை தொடர்ந்து நடாத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் மனத்தைரியத்துடன் 1894ம் ஆண்டு யூன் மாதம் 6ம் திகதி புதன்கிழமை (தமிழுக்கு ஐய பூச நட்சத்திரம்) திரு. எஸ். சீனிவாசகத்தின் காணியில் கொட்டில்கள் அமைத்து ஆங்கில தமிழ் பாடசாலையை திருவாளர்கள் சி. கந்தையா உபாத்தியாயரும், அ. கந்தையா உபாத்தியாரும் ஆரம்பித்து வைத்தனர். அப்பாடசாலையின் ஆங்கிலப்பகுதியே இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என உயர்ந்து வளர்ந்தோங்கி நிற்கின்றது.

எமது "ஸ்கந்தா"வின் நூற்றாண்டு வரலாற்றைச் சற்று ஆராய்வோம்.

1898ம் ஆண்டு: அரசாங்கத்தில் பதிவு செய்து மேலும் பண வசதிகளை பெற வேண்டும் என்ற நோக்கத்தால் ஆங்கில, தமிழ் பாடசாலைகளாக பிரிக்கப் பெற்று கந்தரோடை ஆங்கில பாடசாலை என பெயர்சூட்டப் பெற்றது.

1900ம் ஆண்டு: தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு ரீ.கே. பொன்னையா அவர்கள் அதிபராக பதவி ஏற்றார். திரு. சு. சீனிவாசகம் முகாமையாளராக பதவி ஏற்றார்.

1902ம் ஆண்டு: அரசினர் அங்கீகாரம் பெற்று உதவி நன்கொடைப்பணம் பெற்று வித்தியாசாலை வரிசையில் வைக்கப்பெற்று கந்தரோடை ஆங்கில வித்தியாசாலை எனப் பெயரும் பதிவு செய்யப் பெற்றது. (Kandarrodai English School).அப்பொழுது திருவாளர்கள் நவாலி பி. இராமலிங்கம், புத்தூர் வே. செல்லப்பா, போயிட்டி வி. பொன்னம்பலம், எம். ஏ. ஆறுமுகம் சுதுமலை, எம். தம்பிப்பிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக சேர்ந்தனர். திரு. கே. செல்லப்பா அவர்கள் இங்கு கற்று ஆரிசியர்களாக சேர்ந்தனர். திரு. கே செல்லப்பா அவர்கள் இங்கு கற்று ஆசிரியரானார். (மும்மூர்த்திகளில் ஒருவர்)

1904ம் ஆண்டு: திருவாளர்கள் மல்லாகம் T.N. சின்னத்தம்பி, F.A.R.S. துரையப்பா புன்னாலைக்கட்டுவன், ரீ. செல்லப்பா (லண்டன்) எஸ் விஸ்வநாதன் ஆகியோர் ஆசிரியர்களாக சேர்ந்தனர். கல்லூரி விடுதியில் 100 மாணவர்கள் இருந்தனர்.

1907ம் ஆண்டு: திரு. சி. கந்தையா (ஸ்தாபகர்) தமது சொந்த நிலத்தில் (இப்பொழுது அமைந்திருக்கும் பிரதான மண்டபம்) கட்டிடம் அமைக்க ஆரம்பித்தார். இதற்கு திரு. சு. சீநிவாசகம் முகாமையாளரும் பெரும் உதவியாக இருந்தார்.

1909ம் ஆண்டு: திரு J.T. சதாசிவம் ஐயர் ஆசிரியர் நியமனம் பெற்றார். 1911 ம் ஆண்டு அரசினரின் கீழ் வித்தியாதரிசியாக நியமனம் பெற்றுச் சென்றார்.

1912ம் ஆண்டு: பிரதான மண்டபமும் அதிகாரி திரு. அ. நாகநாதர் முதலியார், J.P.U.M. அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. திரு. T.N. சின்னத்தம்பி பதில் அதிபராக கடமை ஆற்றினார். புதிய அதிபராக கட்டுடையைச் சேர்ந்த திரு எஸ். இளையதம்பி B.A. அவர்கள் நியமிக்கப் பெற்றார். திரு. T.T. சங்கரப்பிள்ளை ஆசிரியராக நியமிக்கப் ,பெற்றார்.

1913ம் ஆண்டு: கனிஸ்ட கேம்பிறிட்ஜ் வகுப்பு பரீட்சைக்கு மாணவர்கள் அனுப்பப்பெற்று திருவாளர்கள் K.S. அருள்நந்தி M.Sc., T. சின்னத்தம்பி, M.A., செல்லையா, S. முருகையா C.C.S. ஆகியோர் சித்தியெய்தினா;

1915ம் ஆண்டு: வித்தியாபதி மெஸ் E.B. டென் ஜொம் வந்து பாராட்டுத் தெரிவித்தார். திரு. S.S. செல்லப்பா ஆசிரியராக நியமிக்கப் பெற்றார்.

1917ம் ஆண்டு: கட்டுடையைச் சேர்ந்த திரு. மு சபாபதிப்பிள்ளை B.A.L.T. தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். திரு. மு. தம்பிமுத்து, Eng. Trained 3rd class. ஆசிரியராக நியமனம் பெற்றார்.

1918ம் ஆண்டு: ஏழாலையைச் சேர்ந்த திரு S. முருகேசு Eng. Trained 1st class ஆசிரியராக நியமனம் பெற்றார். சுன்னாகத்தைச் சேர்ந்த கு. அம்பலவாணர் Eng. Trained 3rd class ஆசிரியராக நியமனம் பெற்றார்.

1919ம் ஆண்டு: திரு L. மாகிறேஸ் கல்வி அதிகாரி வருகை தந்து பாராட்டிச் சென்றார்.

1923ம் ஆண்டு: சிரேஸ்ட கேம்பிரிஜ் வகுப்புகள் ஆரம்பிக்கப் பெற்றன. திரு ஆ. மாணிக்கம் Inter. Sc. 1st class முதலாவது விஞ்ஞான ஆசிரியராக நியமிக்கப்பெற்றார். ஓர் சிறிய விஞ்ஞான பீடமும் அமைக்கப்பெற்றது. பொறுப்பாசிரியராகவும் இருந்தார்.

1924ம் ஆண்டு: திரு S. இளையதம்பி B.A. அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பெற்றார்.

1925ம் ஆண்டு: சிரேஸ்ட கேம்பிறிஜ் வகுப்பு பரீட்சைக்கு மாணவர்கள் அனுப்பப்பெற்று திருவாளர்கள் S. நல்லையா, C.C. கதிரேசு G.G.R. ஆகிய இருவர் சித்தியெய்தினர்.

1927ம் ஆண்டு: மகாத்மா காந்தி அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

1928ம் ஆண்டு: திரு. V. சுப்பிரமணியம் (London Inter Sc.) ஆசிரியராக நியமனம் பெற்றார்.

1929ம் ஆண்டு: திரு. சி. கந்தையா (ஸ்தாபகர்) திரு. இ. தம்பிஐயா (திரு வே. முத்துவேற்பிள்ளையின் மைத்துனர்) உடன் மலேசியா சென்று அங்கு திரு. சி. தம்பி ஐயாவின் சகோதரன் திரு. இ. தம்பிராசா அவர்களையும் சந்தித்து நிதிகள் திரட்டி வந்து கடன்களையும் கொடுத்து இன்னும் புதியகட்டிடங்களை அமைக்கத் தொடங்கினார்.

1931ம் ஆண்டு: திரு வி. முத்துக்குமாரு M.A. அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். அதிகார் திரு அ. நாகநாதர் முகாமையாளராக நியமனம் பெற்றார். விளையாட்டுத் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பெற்று உதைபந்தாட்டமும் தட விளையாட்டுக்களும் ஆரம்பிக்கப் பெற்றன. பிரமஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் ஆசிரியராக நியமிக்கப்பெற்றார்.

1933ம் ஆண்டு: திரு. ஆ மாணிக்கம் பதில் அதிபராக பதவி ஏற்றார்.

1934ம் ஆண்டு: திரு வி. முத்துக்குமாரு M.A, அதிபராக பதவி ஏற்றார்.

1935ம் ஆண்டு:, 1936ம் ஆண்டு: வலி வடக்கில் நடைபெற்ற தட விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்டு முதலாவதாக வந்தது. 7-10-1935ம் ஆண்டு திங்கள் கிழமை (தமிழுக்கு புரட்டாதி மாதம் 21ம் திகதி விஜயதசமி) Skandavarodaya College, Chunnakam என்று பெயர் மாற்றப் பெற்று "C" தர கல்லூரி ஆனது. நம்பிக்கை பணிப்பாளர் சபையும் அமைக்கப் பெற்றது. இதில் ஸ்தாபகர், அதிபர், திரு. அ. நாகநாதர், டாக்டர் எஸ் சுப்பிரமணியம் அடங்குவர். லண்டன் மற்றிக் குலேசன் வகுப்புகள் ஆரம்பிக்கப் பெற்றன. ஆய்வு கூடங்கள் திருத்தி அமைக்கப்பெற்றன. திரு. C.C. பொன்னுத்துரை B.Sc. Lond. திரு எம். கதிரிப்பிள்ளை B.A, திரு வீ. பீதாம்பரம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பெற்றனர்.

1936ம் ஆண்டு: திருவாளர்கள் S.A. மதியாபரணம் B.Sc, V.M. குமாரசாமி, London Arts Sc. ஆசிரியர்களாக நியமிக்கப் பெற்றனர்.

1937ம் ஆண்டு: திருவாளர்கள் என். சபாரத்தினம், London Inter Art சரா. சேதுகாவலர் Bilingual Trained ஆசிரியர்களாக நியமிக்கப்பெற்றனர். அப்பொழுது கரப்பந்தாட்டத்துக்கான மைதானம் மட்டும் தான் இருந்தது. கல்லூரிக்கு தெற்கே உள்ள மைதானம் திருத்தப்பெற்று உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் தட கள விளையாட்டுக்கள் ஆகிய முக்கிய விளையாட்டுக்கள் திரும்பவும் ஆரம்பிக்கப் பெற்றன. திரு. சரா சேதுகாவலர் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக நியமிக்கப்பெற்றார். அத்துடன் பயிற்சியாளருமாக கடமையாற்றினார்.

ஆசிரியர் - 10 மாணவர்கள் 239

1938ம் ஆண்டு: திரு. சி. சிறினிவாசன் அதிபராக நியமிக்கப்பெற்றார். திருவாளர்கள் J.Y. மார்க்கண்டு R. புவனேந்திரன (London Inter Arts) K. இலங்கநாயகம் (London Matric) S. கந்தவனம் (London Inter Sc.) ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பெற்றனர். (J.S.S.A.) யாழ் உதைபந்தாட்ட கல்லூரியின் சங்கத்தில் பதிவு செய்யப் பெற்றது. முதலாவது உதைபந்தாட்டம் ஹாட்லி கல்லூரியுடன் விளையாடி வென்றது. டாக்டர் எஸ். சுப்பிரமணியம் முகாமையாளராக பதவி ஏற்றார்.

ஆசிரியர்கள் 13 - மாணவர்கள் 293.
வீரர்கள் பெயர்கள்: திருவாளர்கள் பீ. நடராஜா, ஏ.வி. இராஜரட்ணம், தில்லைநாதன், ஏ. சிவஞானம், எஸ். தியாகராஜன், கே. சிவப்பிரகாசம், ஆனந்த சுந்தரம், ஏ. சிவபாலசிங்கம், நவரத்தினம், ஏ.வி.எஸ்.சுப்பிரமணியம், எம். வல்லிபுரம் ஆகியோர் மூன்று இல்லங்களாக பிரிக்கப்பெற்று விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. நாகநாதர், சுப்பிரமணியம், இளையதம்பி இல்லங்கள்.

1939ம் ஆண்டு: திரு. ஜே. இராமநாதபிள்ளை B.A. ஆசிரியராக நியமனம் பெற்றார்.

1940ம் ஆண்டு: "B" வகுப்பு கல்லூரி ஆனது. திரு எஸ். தம்பிராஜா ஆசிரியராக நியமிக்கப்பெற்றார்.

1941ம் ஆண்டு: பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பெற்றது. தலைவர் திரு. சி. சிறினிவாசன் முதலாவது மலரும் வெளியிடப்பட்டது. திரு. ப. கந்தசாமி ஆசிரியராக நியமிக்கப்பெற்றார்.

1943ம் ஆண்டு: திரு. ஆ. மாணிக்கம் பதில் அதிபராக நியமிக்கப்பெற்றார். 1945ம் ஆண்டு திரு. எஸ் சிவபாதசுந்தரம் M.A. அதிபராக பதவி ஏற்றார். புதிய மைதான வேலைகள் ஆரம்பிக்கப்பெற்றன.

H.S.C. வகுப்புகள் ஆரம்பிக்கப்பெற்றன. திருவாளர்கள் கே. தியாகராஜா பிள்ளை B.Sc. London, S. குமாரலிங்கம் Inter Arts, K. சிவகுமாரன் London Matric ஆகியோர். ஆசிரியர்களாக நியமிக்கப் பெற்றனர். திரு. ஆ. மாணிக்கம் இளைப்பாறினார். திரு. எஸ் முருகேசு பதில் அதிபராக கடமை ஆற்றினார்.
ஆசிரியர்கள் 14 மாணவர்கள் 324.

1944ஆம் ஆண்டு: திரு. சி. சுப்பிரமணியம் அதிபராக நியமிக்கப் பெற்றார். திரு. வி. சுப்பிரமணியம் பிரதி அதிபராக நியமனம் பெற்றார். ஆசிரியர்கள்: திருவாளர்கள் S. முருகேசு, T. செல்லப்பா, P. தம்பிமுத்து, கு, அம்பலவாணர், T.T .சங்கரப்பிள்ளை, S. பொன்னம்பலம், V. பீதாம்பரம், சரா. சேதுகாவலர், N. சபாரட்ணம், J. இராமநாதபிள்ளை, K. சிவகுமாரன், K. தியாகராஜா பிள்ளை, M.T. குணுவில்ஸ் 50 ஆண்டு பூர்த்தி பெற்றது.

1945ம் ஆண்டு: சர்வகலாசாலைப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி இதில் திரு T.கந்தசாமி (M.Sc) முதல் மாணவர் சென்றார். பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக சுவாமி விபுலானந்தர் வருகை தந்திருந்தார்.

1947ம் ஆண்டு: 12.7.1947 கொழும்பு ப.மா.ச கிளை ஆரம்பிக்கப்பெற்று ஆய்வு இடங்கள் திருத்தி அமைக்கப்பெற்று கல்லூரி முதலாம் தரமானது. தலைவர் திரு. K.S. அருள்நந்தி, உப தலைவர்கள்: திருவாளர்கள், M.N. குலசேகரம், இரா சேதுகாவலர், C.A. ஞானசேகரம், M. நடராஜா, S. நாகரத்தினம் ஆகியோர்.

1948ம் ஆண்டு: புதிய மைதானம் டாக்டர் சுப்பிரமணியத்தால் திறந்து வைக்கப்பெற்றது. இல்ல விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. திரு. A வைத்திலிங்கம் D.J ஆரம்பித்து வைத்தார். 1949ம் ஆண்டு: நடைபெற்ற N.P.T.A. சோதனையில் திரு. சுந்தரலிங்கம் முதலாவதாக வந்தார். கிறிக்கெட், பிங்பொங், பாட்மிங்ரன், 5 இல்லங்களாக பிரிக்கப் பெற்றன. நாகநாதர், சுப்பிரமணியம், இளையதம்பி, கந்தையா, மாணிக்கம் இல்லங்கள்.

1952ம் ஆண்டு: 6.9.1932ம் ஆண்டு ஸ்தாபகர் திரு. சி. கந்தையா காலமானார்.

1953ம் ஆண்டு: 24.1.1953 அதிகாரி தி.அ. நாகநாதர் தனது 103வது வயதில் காலமானார். ஸ்தாபகர் மலர் வெளியிடப் பெற்றது.

1958, 1959ம் ஆண்டு: 1st XII J.S.S.A. உதைபந்தாட்டத்தில் முதலாவதாக வந்தது.

1969 ஆம் ஆண்டு: அரசாங்கம் கல்லூரியைப் பாரம் எடுத்தது. விடுதி மாணவர் - 168.

1961ம் ஆண்டு: 50 மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். இலங்கையில் மூன்றாவது இடமும் யாழ்ப்பாணத்தில் முதலாவது இடமும் பெற்றது. இரண்டுநேர கல்லூரி நடைபெற்றது.

1962ம் ஆண்டு: திரு. சி. சுப்பிரமணியம் அதிபர் இளைப்பாறினார்.1962.10.18 திரு. வி. சுப்பிரமணியம் அதிபரானார். 75 ஆசிரியர் மாணவர். 2045 விடுதி மாணவர் 209. விடுதி ஆசிரியர் திரு. ப. கந்தசாமி.

1963ம் ஆண்டு: 43 மாணவர்கள் பல்கலைக்கழம் சென்றனர். விடுதி மாணவர் 240.

1964ம் ஆண்டு: 1x2 டாக்டர் சுப்பிரமணியம் காலமானார். சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பெற்றது. பொறுப்பாசிரியர் S, சோமகந்தரம் சேகரம்.

1965ம் ஆண்டு: 43 மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றனர்.

1966ம் ஆண்டு: மலர் வெளியிடப்பட்டது. திரு சரா சேதுகாவலர் காலமானார்.(2.9.1966)

1967ம் ஆண்டு: திரு. க. ஆறுமுகம் ஆசிரியமணி இளைப்பாறினார்.

1968ம் ஆண்டு: திரு.T. கந்தையா கிளாக்கர் இளைப்பாறினார்.

1969ம் ஆண்டு: திரு. வி. சுப்பிரமணியம் இளைப்பாறினார். 75ம் ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. திரு. சிவகுமாரன் அதிபரானார்.

1970ம் ஆண்டு: திரு P ஏகாம்பரம்B.Sc.Dip. அதிபரானார்

1973ம் ஆண்டு: திரு. R. சத்தியானந்தன்B.A.Dip. அதிபரானார்.

1976ம் ஆண்டு: திரு. C. தியாகராசாB.A.Dip. அதிபரானார்.
திரு. K.சிவகுமாரன் துணை அதிபர் இளைப்பாறினார்.

1982ம் ஆண்டு: திரு. பொன் நாகரத்தினம்B.Sc.Dip. அதிபரானார்.

1986ம் ஆண்டு: ப.மா.ச. புனர் அமைப்புச் செய்யப்பெற்றது.

1989ம் ஆண்டு: திரு. பொன் நாகரத்தினம் இளைப்பாறினார். திரு. சே. இராசவல்லவன் B.Sc.Dip. அதிபரானார்.

1990ம் ஆண்டு: திரு. ச. பொன்னம்பலம்B.Sc.Dip. அதிபரானார்.

1991ம் ஆண்டு: திரு. விக்கினேஸ்வரம் பதில் அதிபரானார்.

1993ம் ஆண்டு: திரு. ஆ. கமலநாதன் அதிபரானார்.

1994ம் ஆண்டு: திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், பொன் நாகரத்தினம், இளைப்பாறிய அதிபர்கள் காலமானார்கள். ஆசிரியர் வி. பொன்னம்பலம் காலமானார்.

**100ம் ஆண்டு பூர்த்தி.**
**நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் சுன்னாகத்திலும் கொழும்பிலும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட உள்ளது!**

## *Our Leader Emeritus Principal*
## "ORATOR"

Orator Subramaniam - A fitting name indeed. If ever there was a voice with unfailing vibrance on behalf of the needy and the under-dog it was that of Orator Subramaniam who tirelessly Championed the cause of the voiceless. His plangent cry for justice and his indomitable will to tear down the barriers of Prejudice, Secured for many a place in the sun, they would never have got for themselves otherwise.

Orator Subramanian was not merely an Educationist of a rare calibre but also a great human being who never counted the cost of what he subscribed to education in particular and humanity in general. There was never a lost cause or a student beyond redemption. They gave him just the gauntlet for him to pick up. He reached out to them and with his masterly handling of the young helped them find their true personalities.

The records speak for themselves when he took over that school it was lost in relative obscurity in the educational backwoods of the Jaffna Province. It had just 291 students 15 teachers and a set of buildings that could barely claim respectability even in those times. When he retired the school had metamorphosed into one of the premier educational institutions in Jaffna. Probably Orators crowning moment of Glory would have been when the school was raised to Supergrade in 1957, along with Jaffna College and Jaffna Hindu College.

It were not only the imposing eddifices that had replaced the dilapidated old building but the quality of education and the very healthy atmosphere within the school that made it one of the leading institutions in Jaffna when he retired in 1962. Skantha had 65 teachers, 2045 students, a hostel for 200 students and one of the best sets of laboratories in the island. The school boasted of two play grounds and one of them was a full sized one. Results of the University entrance examination were most impressive little more need to be said about "Orators" diligence and dedication to the cause of education.

As testimony to his rare human qualities and his concern for others I would like to quote an extract from a letter sent to him by A.N. Shanmugaratnam a distinguished old boy of his and a Professor of Social Science, Resident in Norway. It was a letter wishing

him on his ninetieth Birthday "As a teacher you educated Generations of Youth and Positively influenced their values. We saw you as an Embodiment of Radical Humanism. You were a daring active humanist, not a passive one. You stood up for your ideas, ideas which were ahead of the times and everyone knew where Orator stood in a social conflict. He always stood on the side of the under priviledged in a casteist society.

Tribute enough to have bought a glow of reflective self satisfaction in the twilight of his life. God snatched that Greal Educationist away from us on leaving a void in all his pupils who will remember him as long as they live as one of their most treasured associations in their lives.

**S. PATHMANATHAN**
Vice President
OSA SKANDA
COLOMBO

## Our last meeting with Orator

*Orator had to fly back to London due to his failing health while he was holidaying in Sri Lanka in February last year, the executive committee on hearing this news acted fast and paid a courtesy call on him. We had a memorable exchange of views with him and also honoured him with a souvenir. Mr. A. Kamalanathan Principal of our school was also present.*

*He passed away in London on 18th Febraury 1994. Even in the wildest dream we did not think that it would be the very last meeting with him.*

*In memory of late Orator Subramaniam, the Colombo OSA will inaugurate a Scholarship fund towards the promotion, upliftment and furtherance of the education of the deserving children to translate the Mission of Orator into action.*

*S. Pathmanathan.*

உ

## பல்லாண்டு வாழும் எங்கள் ஸ்கந்தா!

வரம்பெற்ற வளமான இலங்கைத் தீவிலே
வடதிசையாக இலங்கிடுமூர் கந்தரோடையில்
தரமிகுந்த சான்றோனாம் கந்தையாவினால்
தாபிக்கப் பட்ட ஸ்கந்தா நிலைத்தது இன்றும்!

புகழ்பெற்ற கல்லூரிகள் பூத்துநின்ற வேளை
புதிதாகத் தோன்றியதே எங்களின் ஸ்கந்தா!
புகட்டியது சாதிபேதம் இல்லையென்பதை!
புலர்ந்ததெங்கள் ஊரில் அன்றே ஏழையின்காலை!

'ஏழையான மாணவரும் கற்றிட வேண்டும்!
ஏற்றம் பெற்றுயரவேண்டும் அவர்களின் வாழ்க்கை
கொள்கையென்று கொண்டதிதை ஆதிநாள் முதல்;
கோட்பாடாய் ஒழுகியதே நமது சமூகம்!

கருணை கொண்ட அகிம்சைவாதி காந்திமகானும்
ஸ்கந்தாவை ஏற்றிவைக்கும் எண்ணமுங் கொண்டு
வருகை தந்து வாழ்த்துக்கள் கூறிவைத்தாரே!
வளர்ந்ததெங்கள் அன்னையான் கல்வி நிறுவனம்!

சகலதுறையிலும் ஸ்கந்தா முன்நடை போட
சகாப்தங்கள் தோறும் எங்கள் சாதனைமேவ
வகை புரிந்தனர் ஒரேற்றர் என்னும் கல்விமான்!
வாழ்ந்த காலம் வார்த்தைகளால் கூறமுடியுமோ?

சிறுசுடராய் உதித்தெழுந்த எங்களின் ஸ்கந்தா
சீரியதாய் ஓங்கியின்று சிறப்புற மிளிர
உறுதுணையாய் நின்றெதங்கள் தமிழூர் சமூகம்!
உதவி செய்த அதிபர்களோ பற்பலராவர்!

பல்துறைகள் தேர்ந்துகற்ற பட்டதாரிகள்,
பண்பு பெற்ற வைத்தியர்கள், வங்கியாளர்கள்,
நுண்கலைகள் ஆற்றுகின்ற கலைஞர்கள் பலரை,
நூற்றாண்டாய் வழங்கி வந்ததெங்களின் ஸ்கந்தா!

பழைய மாணவர் நாங்கள் பலம் வழங்குவோம்!
பல்லாண்டு வாழும் எங்கள் ஸ்கந்தா இனியும்!
வாழ்வாங்கு வாழுதற்கு வழிசமைத்த தாய்,
வளமுடனே வாழ்க என்று வணங்கிடுவோமே!

ஆக்கம்: இணுவை – ஆ.இ. வாமலோசனன்.

# நூறாவது ஆண்டில் ஞான ஒளிவீசும் "ஸ்கந்தா" என்னும் ஞானச்சோலையின் பொற்கால நினைவுகள்

இந்து மகாசமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் அழகிய இலங்கை தீவினிலே முத்துக்களுள் சிறந்த முத்தான கல்வி என்னும் தனிப்பெரும் செல்வத்தின் உறைவிடமாக உள்ள இடம் யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்திலிருந்து வடதிசைநோக்கி 5 மைல் தொலைவில் காங்கேசன் துறைக்கும் யாழ் நகருக்கு நடுவில் ஒரு சிகரம் போல் விளங்கும் பட்டினம் சுன்னாகமாகும். சுன்னாகம் என்னும் போது சிறந்த அந்தண பெருமக்கள், ஞானிகள், புலவர்கள், பண்டிதர்கள், வைத்தியர்கள், உழவர்கள் வாழ்ந்த, வாழுகின்ற இடமெனக் கூறலாம். மேலும் அருல் மிகு ஆலயங்களும் கல்விக்கூடங்களும் இங்குள்ளன. நெல்வயல்களும், முக்கனிச் சோலைகளும் இந்நகரைச் சூழவுள்ளன. வடமாநிலம் முழுவதற்குமே ஒளியேற்றி வைக்கும் மின் நிலையத்தையும் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக உலகிலேயே சிறந்த தொழிலான உழவுத் தொழிலின் கேந்திர நிலையமாக சுன்னாகம் மத்திய சந்தை விளங்குகின்றமையை இங்கு கூறலாம். இப்படியான பல சிறப்புக்களையும் கொண்ட சுன்னாகம் பட்டினத்தின் மேற்குப்புற நுழைவாயில்தான் பழம்பெரும் நகரான கந்தரோடையாகும். கந்தரோடை என்னும் பொழுது அதன் தொன்மையின் சிறப்பையும், பெருமையையும் அங்கு அகழ்ந்தெடுக்கப்படும் சரித்திரச்சான்றுகள் சான்று பகரும். இதனால் இங்கு பேரறிஞர்கள், கல்விமான்கள் வாழ்ந்துள்ளமை புலப்படுகின்றது.

இவ்வாறான புகழ்மிக்க நற்பெருஞ் சூழலில் கந்தரோடைப்பதியில் கம்பீரமாக காட்சியளிக் கும் மாபெரும் கல்விக்கூடமே "ஸ்கந்தா" எனச் செல்லமாக எல்லோராலும் அழைக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி. இக்கல்லூரி பலப்பல நன்மாணாக்கரை உருவாக்கிஇப்போது நூறாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்து பெருமை கொள்கின்றது.

கந்தபுராணத்திலே "ஒரு திருமுகன் வந்து உதித்தனன் உலகமுய்ய" என்பதுபோல முருகனுடைய அடியராகிய உ.யர்திரு கந்தையா உபாத்தியாயர் கந்தரோடையில் வந்துதித்தார் கல்வி வாழ. அப்பெருமானாரின் பெரு முயற்சியினால் ஸ்கந்தா ஆரம்பிக்கப்பட்டதனால் அவ்வூர் அயலூர் மக்களின் கல்வித்தரம் உயர்ந்து வருகின்றதென்றால் மிகையாகாது. எமது ஞான வள்ளல் கந்தையா உபாத்தியாயரின் சிந்தனையில் எழுந்ததுதான் ஸ்கந்தா எனும் ஞானச்சோலை.

இக்கல்லூரிக்கு கந்தையா உபாத்தியாயர் அவர்கள் சுப்பிரமணியப்பெருமானுடைய அக்ஷ்டோத்தர நாமத்திலே முதலாவதாக உள்ள "ஓம் ஸ்கந்தாய நம" என்ற அடியை எடுத்து "ஸ்கந்தவரோதயக் கல்லூரி" என்று பெயர் வைத்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கில அரசாட்சிக்காலத்தில் சைவமும், தமிழும் வாழவும், வளரவும் எமது பிள்ளைகளுக்கென்றே ஒரு கலவன் பாடசாலையை அமைத்தவர் ஸ்ரீமான் கந்தையா உபாத்தியாயர் அவர்கள். இக்கல்லூரியின் வளர்ச்சியில் இவருடன் இணைந்து செயல்பட்ட பெருமை வைத்தியகலாநிதி P.S. சுப்பிரமணியம் அவர்களைச் சாரும்.

ஸ்கந்தாவின் வளர்ச்சிக்காலத்தில் அதிபர் பதவியை வகித்த அறிவுபடைத்த ஆசான் ஒரேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் பொற்காலத்தை நினைவு கூருதல் பொருத்தமாகும். இவ் அதிபரவர்களின் பெயருக்கு முன்பாக உள்ள ஒரேற்றர் என்னும் ஆங்கிலச்சொல்லே அவரின் நற்புலமையை எடுத்துக்காட்டும். திரு C. சுப்பிரமணியம் அவர்கள் கல்லூரி அதிபர் பதவியை ஏற்றதும் ஒரு புதுமணப்பெண் ஒரு வீட்டிற்கு வந்ததும் அந்த வீட்டிற்கு ஒளி ஏற்றி அந்த வீடு எப்படி ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுமோ, அதுபோல் இக்கல்லூரியும் அதன் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. "புகுந்த வீட்டு வளம் பெருக உழைப்பது தான் பெண்மணிக்குப் பெருமை" என்ற வாககிற்கிணங்கவும், கல்லூரியின் வளம் பெருகவும் அல்லும் பகலும் பாடுபட்டார் எமது அதிபர் ஒறேற்றர் ஐயா அவர்கள். அவருக்கு உறுதுணையாக செயலாற்றிய வர் உதவி அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள். இக்காலகட்டத்தில் ஆசிரியர் திரு க. சிவகுமாரன் அவர்கள் கனிஷ்ட பிரிவிற்கு பொறுப்பாக இருந்தார். அவர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், ஒழுக்கத்திற்கும், தன்நலன் கருதாது சேவையாற்றி கல்லூரியின் வளர்ச்சியில் நல்லதோர் அத்திவாரத்தை அமைத்துக் கொடுத்து அரும்பெரும் பங்காற்றியமையைக் கூறலாம். காரியாலய வேலைகளை கடமை உணர்வுடனும் கண்ணியத்துடனும் ஏனைய அலுவலருடன் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தவர் எல்லோராலும் அன்பாக "கிளாக்கர்" என்று அழைக்கப்படும் திரு. கந்தையா அவர்கள். பொதுவாக எல்லா ஆசிரியருமே தத்தமது கடமைகளை ஸ்கந்தாவுக்குச் செய்துள்ளது சிறப்பானது. ஆசிரியரதும், மாணவர்களினதும் நன்முயற்ச்சிக்கு உறுதுணைபுரியும் வகையில், சனி, ஞாயிறு போன்ற பாடசாலை அற்ற நாட்களில் விஷேட வகுப்புக்களை (இலவசமாக) நடத்துவதற்கு ஆசிரியர்களிடையே போட்டாபோட்டி ஏற்பட்டமையால் ஒறேற்றர் ஐயா அவர்கள் நேர சூசிகை போட்டுக் கொடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான கற்பித்தல் முறையால் ஆசிரியர்களது விளக்கவுரைகள் மாணவர்களுக்கு "தேனிலே கலந்த பலாச்சுளைபோல" சுவையாக இருந்தது மட்டுமல்லாமல் "பசுமரத்தாணி போல" இலகுவாக மனதில் பதிந்தது. இதனால் இக்கல்லூரி "நாளொரு மேனியும் பொழுதொரு

வண்ணமுமாக"வளர்ந்தது. கல்வி என்னும் தேனைச் சுவைப்பதற்கு தேனைக்கண்ட தேனீ போல இலங்கைத் திருநாட்டின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் இக்கல்லூரியில் வந்து குவிந்தனர். இதனால் விடுதிச்சாலைகள் நிரம்பி வழிந்தன. அயலூர் வீடுகளும் மாணவர் விடுதியாகின. இடம் போதாமையால் காலையில் கனிஷ்ட பிரிவுகளுக்கும், மாலையில் சிரேஷ்ட பிரிவுகளுக்கும் வகுப்புக்கள் நடத்த வேண்டியதாயிற்று.

மாணவர்கள் இவ்வரிய அறிவுச்சோலையில் சஞ்சரித்துப் பல்கலைக்கழகம் எய்தினர். ஸ்கந்தா உருவாக்கிய நன் மாணாக்கரே இன்று பேரறிவுமிக்க பேராசிரியர்களாகவும், தலை சிறந்த வைத்தியர்களாகவும் ஆற்றல்மிக்க பொறியியலாளர்களாகவும், அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் அதிஉயர் அதிகாரிகளாகவும் அறிவுமிக்க கல்விமான்களாகவும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சேவை ஆற்றி வருகிறார்கள். இப்படியாக ஸ்கந்தவரோ தயக் கல்லூரி அன்னையானவள் அட்ட ஐஸ்வரியங்களும் பெற்றுத் திகழ்ந்தகாலம் ஒரு பொற்காலமாகும். இதற்கு ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின் நிர்வாகத் திறமையே காரணமாகும். அவரின் நிர்வாகத் திறமைக்கு ஸ்தாபகர் கந்தையா வாத்தியார் அவர்களும் வைத்திய கலாநிதி P.S. சுப்பிரமணியம் அவர்களும், காலஞ்சென்ற திரு வி. தருமலிங்கம் பா.உ. அவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள். எமது பாடசாலைக்கு மகாத்மா காந்தி, குன்றக்குடி அடிகளார் போன்ற பெரியோரும் மேலும், பல அறிஞர்களும் வந்து சிறப்பித்துள்ளனர்.

எமது பாடசாலையில் வருடாவருடம் நடைபெறும் விழாக்களான ஸ்தாபகர் நினைவு நாள், பரிசளிப்பு விழா, வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி முதலியனவும், விசேடமாக நடைபெற்ற விழாக்களில் 75வது ஆண்டு நிறைவு விழா, பொருட்காட்சி, களியாட்டுவிழா, கொழும்பு றட்ணம் சோடேஸ், கம்பளை சாகிரா கலந்து கொண்ட உதைபந்தாட்டம் என்பனவும் முக்கியமாக குறிப்பிடக் கூடியவை. ஸ்கந்தாவின் சாரணர் இயக்கமும் மாவட்ட ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

ஸ்கந்தவரோதய கல்லூரி அகன்ற பரந்த விசாலமானதும், பசுமையானதுமான பெரிய விளையாட்டு மைதானத்தையும் கொண்டுள்ளது. விளையாட்டிலும் ஸ்கந்தாவிற்கு தனியிடம் எப்பொழுதும் உண்டு. குறிப்பாக உதைபந்தாட்டத்தில் அன்றும் இன்றும் சிறந்து விளங்குகின்றது. முதல் முறையாக ஸ்கந்தாவின் 1ம் பிரிவு 1958ம் ஆண்டில் யாழ் பாடசாலைகள் உதைப்பந்தாட்டச் சங்க சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்திற்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது. அதன் பின்பும் மேலும் பல ஆண்டுகள் எமது முதலாம், இரண்டாம் பிரிவுகள் பல வெற்றிக் கிண்ணங்களை பெற்று யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றன. அதுமட்டுமல்லாமல் அக்காலத்தில் கொழும்பிலும் "வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும்" என்ற வாக்குக்கமைய தமது திறமையை ஸ்கந்தா மாணவர்கள் காட்டியுள்ளனர். எமது விளையாட்டு வீரரர்கள் உள்ளூரில் உள்ள பாடசாலைகளிலும், கொழும்பில் பிரபல பாடசாலை யிலும் சிறந்த பயிற்சியாளர்களாகத் திகழ்கின்றனர். இதுமட்டுமல்லாமல் சர்வதேசப் பயிற்சியாளராகவும் இருக்கிறார்கள். சிறந்த மத்தியஸ்தவர்களாகவும், விளையாட்டு உத்தியோகத்தர்களாகவும் இருக்கிறார்கள். விளையாட்டு துறையில் சிறந்த வீரர்களை உருவாக்கிய மைக்கு ஆசிரியர்கள் திரு. சி. தியாகராசா, திரு. M.S. செபஸ்ரியாம்பிள்ள ஆகியோரின் பங்கு அளப்பரியது. திரு து.ரு. செபஸ்ரியாம்பிள்ளை அவர்கள் விளையாட்டுத்துறையின் சிற்பியாக விளங்கினா என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அன்னையானவள் மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கும், சிவில் யுத்தத்தால் புலம் பெயர்ந்தோருக்கும் தனது கஷ்ட நஷ்டங்களைப்பாராது மலர்ந்த முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு தஞ்சமளித்து வருகிறாள். இப்போது எமது கல்லூரி அதிபரும், உதவி அதிபரும் ஆசிரியர்களும், மாணவர்களும், கல்லூரி அபிவிருத்திச் சபையும், பழைய மாணவர் சங்கமும் அயராது உழைத்து எமது கல்லூரியை மேலும் வளரச் செய்து வருகிறார்கள். பெரிய, நீண்ட கட்டிடத் தொடர்களைக் கொண்ட எமது கல்லூரியில் ஒரு முருகன் ஆலயம் இல்லாதது ஒரு பெரும் குறையாகும். நூறாம் ஆண்டில் எமது ஞான அன்னை காலடி எடுத்து வைக்கும் இந்நேரத்தில் எங்கள் அறிவாலயத்தில் ஒரு புதிய அருள் ஆலயம் அமைக்க எல்லோரும் முன்வர வேண்டும். எமது ஸ்கந்தாக் கல்லூரியின் அரும்பெரும் சொத்தான கல்லூரியின் கீதத்தை ஆக்கித்தந்த அருந்தமிழ் புலவர் வித்துவான் C. ஆறுமுகம் அவர்களின் வாழ்த்துப் போல வாழிய வாழிய எங்கள் கல்லூரி. வளர் இளமதியெனவே வாழிய எங்கள் கல்லூரி. வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என நாம் எல்லோரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மீண்டும் ஒரு பொற்காலத்தை அடைய வாழ்த்துவோம்!

மண்டலநாயகம் கோணேஸ்வரன்
(ஆயுட்கால உறுப்பினர் - ஸ்கந்தா
பழைய மாணவர்சங்கம் கந்தரோடை சுன்னாகம்
நூற்றாண்டு விழா குழு உறுப்பினர் - கொழும்பு

• • • • • • • • • • • • •

# My Favourite Teacher

Mr. M. Sebastiampillai of Uduvil joined Skandavarodaya College in 1954 and took charge of training the 2nd XI Soccer team in 1957. His interest in Soccer and the hard training and practice he gave the Socceries made them to shine well in Soccer and reach quarter final in 1954 and semifinalist in 1958. Although we couldn't become the champions Mr. Sebastiampillai did not give up hope and worked harder and thanks to his untiring efforts we become the Champions in 1963 & 1964. I am proud to say that our team brought fame to the College and to our sports coach Mr. Sebastiampillai by winning the pretigious Jaffna Schools Sports Association Soccer tournament in 1963 & 1964.

The standard of Soccer played by the Skanda Varodaya College was such that people of all walks life rushed to the play ground well in time in great numbers to watch the team playing. Mr. Sebastiampillai has sports in his veins. He not only coached Soccer but also took charge of training cricketers the standard of training the students and the fame the teams brought to the college attracted even students who were not sports minded to take to sports such as Soccer and Cricket.

Skanda Varodaya College was the only College in Jaffna that played against St. Thoma's College Mt. Lavinia - The giant in the field of Cricket in Colombo South and though our team couldn't win, gave them a close shave. Our boys did so well that everyone remembers the day with justifiable pride.

Nobody can ever forget the players produced by our famous "SEBASTI" Sir. Mr. Sebastiampillai, though a Christian, took a keen interest in other religions and took part in all the Hindu religious functions in the college.

Mr. Sebastiampillai was a good teacher in the real sense. His method of teaching Maths was such that a lot of students who thought Maths a dificult subject and hated it soon became interested in the subject. He was a teacher loved and respected by all the students and parents although he is out of Skanda his good qualities are still remembered by the past students. During the Soccer and Cricket season he is the first to come and last to leave the College, and played prominent part on College day Sportsmeet. He retired very quietly without much fanfare while holding the responsible job of Sectional Head of year 11 classes. He was kind, helpful, painstaking and a good disipilinarian.He moulded good character through sports. Above all he was a teacher devoted to his students and I am happy to have been one of his students.

**K. VICKINESWARAN**

PARIS

# பழந்தமிழர் சமுதாயத்திலே மூடநம்பிக்கைக்கு எதிர்ப்பொலி

பேராசிரியர் பொ. பூலோகசிங்கம்

அணுவின் ஆற்றலை அறிவியல் முன்மொழிகின்றது. நம்பிக்கையின் சக்தியை உலகியல் வழிமொழிகின்றது. இரண்டில் வன்மை மிக்கது யாது? விடைகூறுவதற்கு அரிதான கேள்வி. நம்பிக்கை சமுதாய இயக்கத்திற்கு உந்துசக்தியாக நின்று நில்வுகின்றது. சமுதாயம் உயிர்ப்புடையது. உயிர்ப்பு இல்லாத சமுதாயம் ஒடுங்கி ஓய்ந்துவிடும். உயிர்ப்புக்கு உறுதுணை நம்பிக்கை. மனிதன் ஒவ்வொரு அடியையும் முன்னே வைக்கும்போது நம்பிக்கையின் காந்தசக்தி அவனை ஈர்த்துச் செல்லுகின்றது. நம்பிக்கையில்லையேல் அவன்சோர்ந்து ஒடுங்கிவிடுகிறான்.

இரண்டும் ஒன்றும் மூன்று என்பது ஒருண்மை. அது அன்று தொடக்கம் இன்றுவரை நம்பப்படுகின்றது. எப்படி மூன்றாயிற்று என்ற வினாவிற்கு இடமில்லை.
இத்தகைய உண்மைகள் சந்தேக விபரீதம் கடந்து அறிவியலாக மலர்ந்து உலகோரால் நம்பப்பட்டு உலக வளர்ச்சிக்கு உறுதுணையாயின. இன்று நல்ல நம்பிக்கைகள். குகையில் வாழ்ந்த மனிதனைக் கோள்களின் இயல்பை நாடிச் செல்லுவதற்கு ஆயத்தம் செய்தவை.

அறிவியலுக்குப் பொருந்தாத நம்பிக்கைகளும் மனித சமுதாயத்திலே ஏராளமாகவுள. இவற்றிலே சில, அறிவுக்குப் பொருத்தமற்றவையாயினும், சமுதாயத்திற்குப் பயனளிப்பவை. சுற்றத்தவரின் ஜனன மரண ஆசௌசம் காத்தல் அறிவுக்குப் பொருத்தமற்றதாயினும் அவர்களிடையே பாசத்தொடர்பை வளர்த்து ஒற்றுமையைப் பேண வழிசெய்வதால் சமுதாய இயக்கத்திற்குப் பயன்விளைத்து நிற்கின்றன. சமுதாயக் கட்டுக்கோப்புக்கு உதவுகின்றன. நன்னெறிகள் இங்கு நம்பிக்கைகளாகிவிடுகின்றன.

ஏனையவை எள்ளளவு உண்மையின்றி பொய்மையிலே பிறந்து, பொய்மையிலே வளர்ந்து, காலகதியிற் பழக்கமாகி நம்பிக்கையென உயர்ச்சிகண்டவை. மானிடத்தின் வளர்ச்சிக்கு அவற்றின் பங்களிப்பு பூஜ்யம். ஆயினும் மானிடத்தினை அவை அமுக்கி மூச்சுத்திணற வைக்காமல் இல்லை. எதனையும் கூர்ந்து நோக்கிக் காரணம்காண முற்படும் அறிவியல் யுகத்திலே இவற்றை உதறி எறிய மக்கள் முற்படுவதிலே ஆச்சரியமில்லை.

ஆயினும் அத்தகைய யுகம் உதயமாவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே மானிடம் இப்பணியிலே இறங்கிவிட்டது. ஆயினும் இன்றுவரை அது முடிந்தபாடாக இல்லை.

மனிதனுக்கு உண்டுபடும் நோய்களைப் பொதுவாக உடல் நோய் என்றும் மனநோய் என்றும் வகுப்பார்கள். மனநோயும் உள்ளத்தை மட்டுமன்றி உடலையும் பாதிப்பதாகும். மனநோய்களில் ஒன்று காதல் நோய். இது காம நோயிலும் பார்க்க வேறுபட்டது. காதல் நோய் அதற்குரிய மருந்தினால் மாறிவிடும். காமநோய் அழிவிற்கே இட்டுச் செல்லும்.

காதல் நோய் மனநோயாயினும் உடல் வேறுபாட்டினாலே வெளியே தெரிந்துவிடுகின்றது. கலகலப்பு ஓய்ந்து, உடலுக்குள்ளே ஒடுங்கி, பித்துப் பிடித்தாற் போலே விழித்து, சோர்ந்து, இளைத்துப் பொலிவற்று நிற்பவரை நோய் பீடித்தவராகக் கருதுவது கஷ்டமில்லை.

ஆயினும் இளமையின் மனோ வளர்ச்சியினைக் காலம் தாழ்த்தியே காண முற்படும் முதுமை, நோயின் உண்மைக் காரணத்தினை அறியாது திகைத்து நம்பிக்கையிடம் தஞ்சம் புகுகின்றது. அது பேய்பிடித்துவிட்டது என்றும் தெய்வக் கோளாறு என்றும் முடிவு அளிக்க முற்படுகின்றது.

இத்தகைய நம்பிக்கைகள் காமிக பூசைக்குக் களம் அமைக்கின்றன. காமிகபூசை பயன்விரும்பிச் செய்யும் பூசை. தம்மகளைப் பீடித்த நோயினை நீக்கப் பெற்றோர் தெய்வத்தைப் பிரீதிசெய்ய முந்துகின்றனர். இக்காமிகபூசை பெருவழக்காக இருந்த நிலையைப் பழைய களவுப் பாடல்கள் காட்டுகின்றன.

புதுமணல் பரப்பிய முற்றத்திலே செந்நெல்லின் வெண்பொரியை மலர்களுடன் தூவிக் களம் அமைக்கப்படுகிறது. அங்கு குட்டியாட்டினை அறுத்து அதன் இரத்தத்தோடு கலந்து தினையரிசி பலியாக வைக்கப்படுகின்றது. பல வகையான வாத்தியங்களும் அங்கு முழங்குகின்றன. கடப்பமலர் முதலாம் மலர்களோடு பனந்தோட்டினையும் சூடிக்கொண்டு, வேலினைக் கையிலேந்தியவனாய் பல தெய்வங்களையும் உடன்

வாழ்த்தி வேலன் ஆடுகிறான். அப்போது ஏற்படும் ஆவேசத்திலே அவன் நோய்க்குக் காரணம் முருகன் என்று கூறி, அத்தெய்வத்தின் அருள்பெற ஆடலோடு வழிபாடு செய்கிறான்.

வேலன் கூற்றையும் செயலையும் அன்றைய மரபு ஏற்றுக்கொண்டு ஆதரிக்கின்றது. ஆயினும் மெய்யறிவு ஆதரிக்காமல் அவற்றைக் கண்டிக்கத் தவறவில்லை.

அகப்பாட்டின் தலைவியொருத்தி சுற்றத்தவரின் செயல்கண்டு சிரிக்கிறாள் (அக. 22). அவள் சிரிப்புக்குக் காரணம் யாது?

> "முருகனுக்குப் பூசை நடந்தபோது யான் உடல் பூரித்தேன். அதனைக் கண்டவர், வேலனின் வெறியாட்டினாலே எனது நோய் நீங்கியது என்று எண்ணினார்கள். அவர்களுடைய அறியாமையை எண்ணும் போது சிரிப்புத்தான் வருகிறது. ஏனென்றால் நான் பூரித்ததற்குக் காரணமே வேறு. வெறியாட்டத்தின் அமளியிலே யார் கண்ணிலும் படாது உட்புகுந்த என் காதலன் எனக்கு இன்பம் தந்தான்"

மெய்யறிவின் சிரிப்பொலி தலைவியின் வார்த்தைகளில் கேட்கிறது. குறுந்தொகைப் பாடலொன்றிலே (362) தோழி ஒருத்தி வெறியாடும் வேலனைக் கேலியாகக் கேட்கும் வார்த்தைகளும் இச்சிரிப்பொலியைக் காட்டுகின்றது.

> "வேலனே! இவளை முருகன் துன்புறுத்திவிட்டான்" என்று பலிகொடுக்கிறாயே. அதனால் என்ன பயன்? உன் பலியினை இவள் காதலனின் மார்பு ஏற்று உண்ணுமா? ஏனென்னார், அதுதானே இவள் துன்பத்திற்குக் காரணம்"

வெறியாட்டத்தின் பயனின்மை இங்கே வெளிடாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நம்பிக்கையை நையாண்டி செய்வதோடு மட்டும் பழைய புலவன் நின்றுவிடவில்லை. அதனை ஆத்திரத்துடன் அவன் கண்டிப்பதையும் நாம் காண்கிறோம்.

யாருக்காக முருகனுக்குப் பூசை எடுக்கப்படுகின்றதோ அவளுக்கும் அவளுடைய ஆருயிர்த் தோழிக்கும் பெற்றோர் எடுத்த பூசை மகிழ்ச்சி தரக்கூடியது அன்று. வாடிய மேனி முன்பு போலப் பொலிவு பெறாவிட்டால், தலைவிக்கும் தலைவனுக்கும் இடையுள்ள உறவு பலரும் கதைக்கும் வகையிலே வெளிப்பட்டுவிடும். களவு அம்பலத்துக்கு வந்துவிடும். பல்வரிசையின் நுனியைக் கூட, வெளியே தெரியாதவாறு, கண்ணாலும் முகத்தாலும், முறுவலிக்கும் பண்புடைய பெண்மைக்கு இலக்கணமான நாணத்தினை உயிரினும் மேலாகப் போற்றிய சமுதாயத்திலே தோன்றி வளர்ந்தவள், தன் உள் நோயைப் பிறர் அறிவதை விரும்பவே மாட்டாள்.

அதற்கு மேலாக மானப் பிரச்சினையும் உண்டுபட்டு விடுகிறது. தன்நோய்க்குச் சடங்கிலே கூறப்படும் தவறான – தீமையான காரணத்தை அவள் கற்பு ஏற்றுக் கொள்ள முடியுமா? காதலனை விட்டு விலகி இருப்பதால் உண்டான நோயினை, வேறொருவனால் – முருகனால் – உண்டானது என்பதைக் கற்புக்கடம் பூண்டு நின்ற பெண்ணால் ஏற்றுக் கொள்ள முடியுமா?

> உயிரினும் சிறந்தது நாண்:
> நாணினும் கற்புச் சிறந்தது.

என்றுதான் அவள் கற்றிருக்கிறாள். எனவே வெறியிட்டு அவளுக்கு இழுக்குத் தேடுவதாக அமைந்துவிட்டதே! இந்நிலையிலே அவளிடம் எதனை எதிர்பார்க்கலாம்? தெய்வத்தினையே கற்பு எள்ளத் தொடங்குகின்றது. கற்புச் சினக்கும்போது தெய்வம் முன்னிற்குமா?

> "இந்த நோய் தலைவனால் வந்தது; உன்னால் வரவில்லை. நீ அதை நன்றாக அறிவாய்.
> அப்படி இருந்தும் வேலன் வேண்ட
> அண்ணாந்து கொண்டு வந்துவிட்டாய்.
> உன்னைக் கடவுள் என்கிறார்கள்.
> ஆனால் உனக்குச் சுய அறிவு இல்லை.
> இப்படியான இடங்களிலே இனி வராதே"

என்று இளமை எள்ளி நிற்கின்றது (நற்றிணை 34)

மூட நம்பிக்கைகளைப் புறங்கண்டு திண்ணிய மனங்கொண்டு மக்கள் உயர்வடைந்தாலே நாடு சிறப்படைய முடியும். இன்று நேற்று அல்ல. எப்போதோ சமுதாயம் அவற்றிற்குச் சாவுமணி கட்டத் தொடங்கிவிட்டது. ஆயினும் அவை வெட்ட வெட்டத் தளைத்துக் கொண்டே வரத்தான் செய்கின்றன. சிந்தனைத் திறனும் அறிவும் சமுதாயம் முழுவதும் ஊடுருவி நீக்கமற நிற்றல் வேண்டும்.

# றோகணத்தில் கந்தபுராண கலாசாரம்

ஆ. தேவராஜன்
(பொதுச் செயலாளர், தனிநாயகம் மன்ற நம்பிக்கயம்)

இலங்கையின் தென்பகுதி றோகணம் என்று அழைக்கப்படுகிறது. வரலாற்றுத் தொடக்க காலத்தில் வெளியுலகத் தொடர்புகள் நடந்த துறைமுகம் இருந்த இடம் மாத்துறை என்று வழங்கிற்று. மாத்துறை என்றே இந்த இடம் பழைய ஆவணங்களில் கூறப்படுகிறது. பின்பு அது மருவி மாத்தறை என்று ஆயிற்று. இந்தத் துறைமுக நகரத்தை அண்மித்த இடமான தெவிநுவர கோவில்கள் மலிந்த இடமாகத் திகழ்ந்தது. புகழ்பெற்ற இந்த இடம் தேவநகரம் என்றே முன்பு அழைக்கப்பட்டது. தெவிநுவர என்ற சிங்களப் பெயரின் பொருளும் அதுவே. இங்கு புகழ்பரப்பிய நகரீஸ்வரம் என்ற சிவன் கோவில், மிகப் பெரிய நெடுமால் கோவில் (பெருமாள் கோவிலென்றும், விஷ்ணு கோவிலென்றும் அழைக்கப்பட்டுள்ளது), கதிர்காமம் முருகன் கோவில் என்பன இருந்துள்ளன. இன்று நகரீஸ்வரம் இருந்த இடம் தெரியவில்லை. நெடுமால் கோவிலின் அழிபாடுகள் உள்ளன. கதிர்காமம் முருகன் கோவில் இன்றும் உள்ளது.

முருகனின் பெருமை கூறும் மிகப் பழைய இலக்கியம் திருமுருகாற்றுப்படை. முருகன் குன்றுதோறாடும் குமரன் என்றே அழைக்கப்படுகிறான். கதிர்காமத்திலும் முருகன் கதிரமலையில்தான் வீற்றிருக்கிறான். சிங்கள மக்களும் இதை "பழைய மலை" அல்லது "மூத்தமலை" (வடிஹிற்றி கந்த்) என்று அழைக்கிறார்கள். சிவனைவிட முக்கிய கடவுளாக, முழுமுதற் கடவுளாக முருகன் திருமுருகாற்றுப்படையில் காட்டப்படுகிறான். முருகன் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் வட இந்திய தெய்வமான சுப்ரஹ்மண்யன் (சுப்பிரமணியன்) ஸ்கந்த (கந்தன்) என்று அழைக்கப்பட்ட தெய்வத்துடன் இணைக்கப் படுகிறான். வட இந்திய வேதகாலத் தெய்வங்கள் பல தமிழ்நாட்டுச் சைவத் தெய்வங்களுடன் இணைக்கப் பட்டுள்ளனர். இது அரசியல் பண்பாட்டுக் கலப்பால் ஏற்பட்டவை. தமிழ்நாட்டின் சமயம் சைவ சமயமாகவே தொடக்ககாலம் முதல் இருந்து வருகிறது.

இந்த முருகன் வணக்கம் இலங்கையிலும் பரவியிருந்தது. கதிரமலை, முருகனின் ஆறுபடை வீடுகளுள் ஒன்று என்ற கருத்தும் நிலவுகிறது. இந்தியாவில் உள்ள முருகனின் ஆறுபடைவீடுகள் என்று கருதப்படும் கோவில்கள் பிராமணிய மேலாட்சிக்கு உட்பட்டுவிட்டன. குமாரதந்திரத்தின் அடிப்படையிலேயே பூசைகள் நடைபெறுகின்றன. ஆனால் இன்றும் கதிர்காமத்தில் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள முறையிலேயே பூசைகள் நடைபெறுகின்றன.

முருகன் வட இந்திய இலக்கியங்களில் (சமஸ்கிருதம் முதலான மொழிகளில் உள்ள இலக்கியங்கள்) திருமணமாகாதவனாகவே இன்றும் காட்டப்படுகிறான். வங்காள மொழி இலக்கியத்தில் அவன் கொள்ளையர் தெய்வமாகவே காட்டப்படுகிறான். ஏனைய இலக்கியங்களிலும் நல்ல தெய்வமாகக் காட்டப்படவில்லை. வட இந்திய இலக்கியங்களில் பிள்ளையார் (விநாயகர்) சித்தி, புத்தி என்ற இரு பெண்களை மணந்தவராகவே காட்டப்படுகிறார். தமிழ்நாட்டுச் சைவசமயமும் வடநாட்டு வேத சமயமும் இணைந்த போதிலும், அவ்வச் சமயங்களில் உள்ள தெய்வங்கள் இணைக்கப்பட்ட இலக்கியங்களும் அதன் வழியாகச் சமரசம் பேசப்பட்டபோதிலும் அடிப்படையில் உள்ள வேறுபாடுகள், ஐதிகங்கள், நம்பிக்கைகள் மாற்றம் அடையவில்லை. கந்தபுராணத்தில் வள்ளி, தேவசேனை குறிக்கப்படுகிறார்கள். சமஸ்கிருத ஸ்கந்த புராணத்திலும் குறிக்கப்படுகிறார்கள். ஆயினும் வடநாட்டு மரபில் வள்ளி, தேவசேனை என்ற தெய்வங்களுக்கு இடமில்லை. ஆக, ஸ்தந்தபுராண என்ற வடமொழி நூல் கந்தபுராணத்தின் தழுவல் என்றே கொள்ள வேண்டும். நூலாசிரியர் போக்கு, அது எழுந்த காலப் பின்னணி என்ற அடிப்படையில் ஸ்கந்தபுராண என்பது கந்த புராணத்தைத் தழுவி எழுந்த பிந்திய நூல் என்பது செக்கோஸ்லவாக்கிய அறிஞர் கமில் சுவலபில் கருத்தாகும். தமிழ் இலக்கியத்தின் அகத்திணைச் சிறப்பு, சைவசித்தாந்தக் கோட்பாடு, காப்பிய அமைப்பு என்பன கந்த புராணத்தை வேறுபடுத்தி மேன்நிலைப்படுத்துகின்றன என்பதும் மனம் கொள்ளத் தக்கது.

தொல்காப்பியம் கூறும் தமிழ்நாட்டின் நான்கு காவல் தெய்வங்கள் மாயோன் (நெடுமால்), சேயோன் (முருகன்) வேந்தன் (இந்திரன் - இவன் தமிழ்நாட்டு இந்திரன், நல்ல தெய்வம், வடநாட்டு இந்திரன் அல்ல), வருணன் (கடற்காவல் தெய்வம்). ஆகியோராகும். இலங்கையிலும் நான்கு காவல் தெய்வங்கள் பௌத்தர்களால் கொள்ளப்படுகின்றார்கள். அவர்கள் உப்புலுவன் (உற்பலவண்ணன்– நீலமேனித்திருமால், விஷ்ணு) கந்தகுமார (குன்றுதோறாடும் குமரன்), சுமண, விபீஷணன் ஆகியோர். தாய்லாந்தின் (பழைய சயம் நாடு) 15ஆம் நூற்றாண்டு ஜினகலமாலி என்ற பாளி நூலில் சுமண, இராம, லக்கண, கட்டகம என்ற தெய்வங்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இவற்றுள் இராம விஷ்ணுவின் அவதாரமாகவும், லக்கண இராமன் தம்பி இலக்குமணன் ஆகவும், கட்டகம கதிர்காமத் தெய்வமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பின்பு இலக்குமணன் சமன்தெய்வமாகக் காணப்பட்டார். சமன் தெய்வம் ஐயனார் ஆகும். இலங்கையில் கண்டி அரசு மேலோங்கிய காலத்தில் கத்தரகம, உப்புலுவன், நாத, பத்தினி என்ற தெய்வங்கள் காவல் தெய்வங்களாகக் கொள்ளப்படுவதைக் காண்கிறோம். கத்தரகம செய்வத்தை கதிர்காம முருகனாகவும், உப்புலுவன் தெய்வத்தை நீலவண்ணத் திருமாலாகவும், நாத தெய்வத்தை வைத்தியநாதமூர்த்த சிவனாகவும்,

பத்தினி தெய்வத்தை பார்வதியாகவும் கொள்வாரும் உண்டு. நாத தெய்வத்தை மகாயன பௌத்தத்தின் அவலோகிதீஸ்வர போதிசத்வராகப் பௌத்தர்கள் கொள்வர்.

கதிர்காமத்தைச் சுற்றியுள்ள பல இடங்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுகளில் குமார என்ற பெயர் இடம் பெற்றுள்ளமை கவனத்திற் கொள்ளத் தக்கது. குமார என்பது தமிழ்க் குமரனின் பிராகிருத வடிவம். கந்தகுமார என்பதும் குன்று தோறாடும் குமரன் என்பதன் சிங்கள வடிவமே. கதிர்காமத் திருவிழாக் காலத்தில் அந்தப் பகுதி மக்கள் இல்லங்கள் எல்லாம் ஒரே விழாக்கோலம் பூணுகின்றன. அவர்களிடம் ஒரு பூரிப்பும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றன. வள்ளியம்மா தங்கள் பகுதிப் பெண் என்ற பெருமை வேறு தொனிக்கிறது. அந்தப் பகுதியில் வாழும் வேடர்கள் தங்கள் குலமகளாம் வள்ளியைத் திருமணம் செய்த முருகனிடம் உரிமையுடன் உறவாடுகிறார்கள். ஒரு நாள் திருவிழாவை அவர்கள் தங்கள் திருவிழாவாக நடத்துகிறார்கள். வேடர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்வர். திருவிழாக் காலத்தில் முருகன் திருப்பேருலாச் (பெரஹரா) செல்லும் போதும் திரும்பி இருப்பிடம் வரும்போதும் பெண்கள் ஆராத்தி எடுப்பார்கள். இவர்களை **ஆராத்தி அம்மாக்கள்** என்று அழைப்பர். இவர்கள் வேடகுல வழித்தோன்றல்கள் என்று நம்பப்படுகிறது. குன்றிலே உள்ள குமரன் கோவிலும் இந்த விழாக்காலத்தில் சிறப்பாகப் பூசைகள் நடத்தப்படுகின்றன. இங்கு பழந்தமிழ் மரபுப்படியே வாய்கட்டிப் பூசை நடைபெறுகிறது. முருகன் படிமம் (விக்கிரகம்) இல்லை. எவரும் காணாத இயந்திரமே வைத்து வணங்கப்படுகிறது. வாய்கட்டிப் பழந்தமிழ் சைவமுறைப்படு பூசை செய்யும் மரபு கிழக்கிலங்கையில் மண்டூர் முருகன் கோவிலிலும், வடக்கில் செல்வச் சந்நிதிக் கோவிலிலும் நடைபெறுகிறது. இலங்கையில் குன்றுதோறாடும் குமரக் கடவுளின் கோவில்களை நிர்வகித்தவர்கள் "குமாரகணம்" என்றழைக்கப்பட்ட செய்தியைக் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

தமிழில் இருந்த கந்தபுராணத்தைத் தழுவியே 1772இல் மாத்தறை முதலியார் அபயக்கோன் விஜயசுந்தர என்பவர் வள்ளிமாதாக் கத்தாவ என்ற நூலைச் சிங்களத்தில் ஆக்கினார். "மூவுலகிலும் தன் பெரும் புகழ் பரப்பிய ஆறுமுகக் கடவுளைப் பற்றிக் கூறும் இன்பமான கதையை தமிழில் இருந்து மொழிபெயர்த்து சிங்களக் கவிதைநடையில் "வள்ளிமாதாக் கத்தாவ" என்ற நூலை முதலியார் அபயக்கோன் விஜயசுந்தர தந்துள்ளார் என்று இந்நூல் பற்றி "மாத்தறை சாகித்திய வம்சய" (மாத்தறை இலக்கியப் பாரம்பரியம்) என்ற நூலில் அதன் ஆசிரியர் வீரசூரிய கூறுகிறார். இந்த அளவுக்கு கந்தபுராணக் கதை அப்பகுதி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இன்றும் இந்தச் செல்வாக்கு நீங்கவில்லை.

பல்லவ மன்னர்கள் தேவர் சிறைமீட்ட இளவலான தளபதி முருகனின் ஸ்கந்த, குமார என்ற பெயர்களைத் தமது பெயர்களின் முன்னுக்கோ பின்னுக்கோ சேர்த்துப் பெருமைப்பட்டார்கள். அந்த மரபு றோகண மக்களிடையே அவர்களுக்கு முன்பிருந்தே நெடுங்காலமாக வழங்கி வந்துள்ளது. தேவர் சிறை மீட்கப் படைகளுக்குத் தளபதியாக, சேனாபதியாகச் சென்றதாலும், அதனால் தேவர்களுக்கே தேவனானதாலும், தந்தைக்கு உபதேசம் செய்து தந்தையை விஞ்சிய தேவனானதாலும், குற்றுதோறாடும் குமரானாக இருந்ததாலும் முருகன் சேன, தேவராஜா, குமார என்ற அபிமானப் பெயர்களை இப்பகுதி மக்களிடம் பெற்றான். இந்தப் பகுதி ஆண் பிள்ளைகளுக்கு தேவராஜா என்ற பெயர் வைக்கப்பட்டது. இன்னும் சில குடும்பங்களில் இந்தப் பெயர் உண்டு. அது குறுக்கம் பெற்று தேவ என்றாகிப் பெயர்களுக்கு முன்னோ அல்லது பின்னோ தேவப்பிரிய, அரமதேவ எந்பனபோல் வழங்குகிறது. அதுபோல் சேனாபதி, சேன எனக் குறுக்கம் பெற்று, சேனரத்ன அல்லது வீரசேன என்பனபோல் வழங்குகின்றது. அப்படியே குமார என்பதும் குமாரசிறி, குமாரசிங்க, அல்லது சிசிரகுமார, வசந்தகுமார என்பனபோல் வழங்குகிறது.

அண்மையில் தமிழ் நாட்டில் இந்துக்களிடையே அவர்கள் நாளாந்தம் வணங்கும் தெய்வம் எது என்று ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள். அதிலே முருகனை வணங்குபவர்களே மிக அதிகமாகக் காணப்பட்டனர். அந்த விகிதாசாரம் வருமாறு: முருகன் 51.3%, விநாயகர் 14.9% சிவன் 11.8% பார்வதி 7.5%; பெருமாள்/கிருஷ்ணா 28.1%; இலக்குமி 7.2%; சரஸ்வதி 6.6%. பிரதேச வாரியாக இந்த வணக்க விகிதாசாரம் வேறுபடுகிறது. மலைப் பிரதேசமான கோயம்புத்தூரில் குன்றுதோறாடும் குமரனை நாளாந்தம் வணங்குபவர்கள் விகிதாசாரம் 80%; திருநெல்வேலியில் 63%; தென் ஆர்க்காட்டில் 61%; தஞ்சாவூர் 32%; கன்னியாகுமரி, மதுரை, தர்மபுரி மாவட்டங்கள் 30%. இந்த முருக வணக்கம் இலங்கையில் கதிரமலைப் பகுதியில் அதிகமாக இருப்பதில் ஆச்சரியமில்லை. யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் கூட மிக அதிகம்தான். அதற்கு கந்தபுராணக் கால முருக வணக்கம் தமிழ் நாட்டில் அருகி விட்டபோதிலும் இலங்கையில் அது பேணப்படுவது குறிப்பிடத்தக்கது என்று ஜேர்மன் அறிஞர் ஹெயின்ஸ் . பேர்ச்சேற் கூறுவது இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூரத் தக்கது.

# SPORTS AT SKANDA

With the arrival of "Orator" Subramaniam as Principal, the Golden Age of Skanda, it may be said, had dawned. "Orator" brought with him an ardent fervour and a firm resolution to mould a generation of students who were well-balanced and disciplined so that they could compete successfully with their counterparts in other parts of the Island.

The First few years of his stewardship were directed to the improvement of the "tone" of the school. By 1948 the school was raised from a rural school to a Grade-I Institution! Convinced that Sports was an essential ingredient to the building up of a balanced personality, he turned his attention to sports. Talented young men were appointed as teachers and asked to take charge of the Sports activities. Mr. S. Selvaratnam who joined the staff in October 1946 was appointed Secretary of games. Mr. A. Nithianandan, a sportsman from Wesley College, Colombo took over the coaching of Athletics. Cricket too was started and the grounds extended to accommodate a Cricket grounds. In all these tasks "Orator" had the whole-hearted, unstinted co-operation of the Secretary of Games and the younger members of the staff, who were recruited in large numbers. July 1948 saw the opening of the Cricket grounds with a match between the staff and students. The students to whom Cricket was an innovation, had benefitted by the training given to them on the junior grounds and rose up to the occasion on a new matting wicket and gave the staff a tough time. Cricket, too had come to stay at Skanda, and they went on to meet the more prestigious school like St. Thomas and Royal and the Thomian team, under the Captaincy of Anura Tennekoon, came down to Jaffna and played a match on our grounds. Though a more experienced side they had to fight all the way to narrow victory!

Mr. Nithianandan scouted for talent in Athletics and found in M.Anandasunderam an athelete of outstanding ability and turned him out to be the JSSA record-holder in both the Discuss and the Javelin throws. Other athletes too did well and soon Skanda was recognised as a formidanble contender for the championship along with Jaffna Central and Jaffna Hindu, the hot favaurties, Orator's hopes were being fulfilled. "good things do not last" in this World and true to the adage, Mr. Nithiannadan left us to take up a more lucrative appointment in Kenya. There was a void which was soon filled by the front-line sportsman, V. Thangarajah, who later became the Director of Physical Education, Northern Region. With the entry of Mr. Thangarajah a fillip was given to Soccer and the Team's journey to the top was accelerated. The first XI went on from success to sucess, becoming Group Champion for the first time in 1951. At Cricket that year we were an unbeaten side.

Skanda had been put on the Sports Map and now it became necessary to maintain this record. Realising this it was decided to coach up a second and third XI teams. The advent of Mr. Sebestiampillai to the staff at this juncture was most propitious, for agreed to take charge of both the second and third strings. The "Golden Age" of Skanda's Soccer had begun and never went down. For the first time the college 1st XI soccer team ably led by M. Jeevaratnam, now The director of sports and national soccer coach, won the coveted J.S.S.A. Championship in 1958, and the same team (except for few changes) repeated the performance the follwoing year under the the leadership of P. Sivapalan. These successes led by the team led to annual staff fixtures in Cricket and Soccer with Kokuvil Hindu College. I remember the match that brought us the Acme of glory in 1958 when we won all the matches we played. We even defeated the famous St. Patrick's College team which was the champion in the Jaffna Schools Group "Two" tournaments. We defeated them by 3 goals to 1 in their own grounds. They felt so humuliated losing to what they called a Village School" that they braced themselves up got the All Ceylon coach, Albert Fernando to coach the team. The next year they defeated us on our own grounds by a solitary goal 3-2. The match was acclaimed as the best and fastest match of the season and the decision was taken after an extention of play at the scheduled for the final whistle the two teams were on level 2-2.

In 1960 as a member of the team of that year too, I cannot forget the group finals at Pannai grounds when we drew with Parameshwara College. The Group Championship was decided on the Goal Average and we had to accept the verdict, much to the chagrin of staff and students alike. It was a glorious match.

Let me share the ecstacy with you. The match was started at 4.30 p.m. under the control of Mr. Srinivasaiyar by 4.50 p.m. We had netted in 3 goals. The breather followed with Skanda leading 3-2. On resumption, Parameshwara put in a further 3 goals to lead 5-3 at 5.15 p.m. There were just ten minutes of play left and, frustrated, our supporters started trekking out of the grounds. Our boys fought back gallantly and at the final whistle the scoreboard read Skanda 5 and Parameshwara 5! As was the practice, the competition was decided on the Goal Average, and we conceded defeat! This match was acclaimed as the best match in the JSSA co,mpettions for quite some time.

The success achieved in playing a Colombo team in Cricket served as an impetus to extend the Cimpetitions to Soccer too. And the result was an annual fixture with Zahira College, Colombo from 1958.

We did have our Set-backs too. It was a match to decide the group Champions in 1956 and we had to meet Kokkuvil Hindu at the Pannai grounds. Till about ten minutes before the final whistle our stylish Goal Keeper A. Paramanathan in diving to save a goal received a kick on the back of his head from a "BOOTER". He rose up and continued to play but it was evident that he was in intense pain. Kokkuvil Hindu College put in a goal and we lost the match. Downhearted we returned to College only to be informed of a greaterloss in the person of A. Paramanathan, (fondly called as "Thottham") who succumbed to his injuries at the Manipay Hospital where he was admitted

It was a Spine-Chilling experience and a lamentable one. Yet it showed the indomitable spirit of the boys of Skanda. It was grand funeral the next day when the Cemetry was filled with representatives from every college in the North and there was hardly anyone down whose cheeks tears of sorrow did not stream. The next day was declared a School holiday in Honour of the brake Hero who sacrificed his life for the School.

1969 our 1st XI Team became joint champions along with Mahajana College, under the untiring leadership of Anton Chandrasekar. Our 2nd XI Soccer team won the championship skippered by in 1963 2nd XI Soccer team won the championship in 1964. For the second year in succession.

Our 2nd XI Soccer teams won back the championship again. Two years in succession. In 1966 and 1967.

In the field of athletics our College team became champions at all Jaffna M.V. & M.M.V in the years 1968 & 1969. In 1965 & 66 our College Badminton team won the Jaffna Schools Badminton Tournament for the Second year in succession.

The successes that Skanda attained were possible only through the astute leadership of a team of dedicated and conscientious co-workers of "Orator". Messrs. V. Chuppiramaniam, K. Sivakumaran, P. Murugesu, S. Selvaratnam, C. Thiyagarajah, A. Nithiyananda, V. Thangarajah, Mathews Nainan, M. Kirupacaran, V.T. Ganeshalingam, M. Sebestiampillai, A. Murugaish, K. Nagamany. T. Pathmanathan, M. Chelliah, S.M. Subramaniam (Bala) K. Thuraisingam to mention only a few.

We hope that the present set of teachers will rally round, the principal and follow the example set by. their Predecessors.

*Kathir Sachithanandar.*

# ஸ்கந்தவரோதய எங்கள் கல்லூரி

*பேராசிரியர் சி.தில்லைநாதன்*

வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதனாலும் முறையான வாழ்வுக்கு வழி காட்டுவதனாலும் மனித சமுதாய உறுதிப்பாட்டுக்கு உத்தரவாதமளிப்பது கல்வி. அது மட்டுமன்றிப் 'பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்ள' உள்ள சந்தர்ப்பங்கள் யாவற்றுள்ளும் அனேகருக்கு வாய்ப்பானது கல்வியாகும், சென்ற நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வியினாலே கிடைத்த ஆதாயங்களைக் கண்ட பலர் அக்கல்வியை வழங்கிய கிறிஸ்தவ மிசனரிமாரின் கல்விக்கூடங்களை நாடினர். அவர்களின் தேவையைத் தமது மதத்தைப் பரப்புவதற்கு அனுகூலமான வாய்ப்பாகக் கிறிஸ்தவ மிசனரிமார் பயன்படுத்தலாயினர். அந்நிலையிற் சைவசமயிகள் பலர் தமது சமயத்தையும் பாரம்பரிய நெறிமுறைகளையும்அசட்டை செய்தமை கண்டு வெகுண்ட நல்லூர் ஆறுமுகநாவலர் ஒழுக்கவிழுமியங்களுக்கு அழுத்தம் தரும். சைவச் சூழலில் சிறார்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டக் கருதினார். கல்வியினால் விளையத் தக்க நன்மைகள் எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டு தொலைநோக்குடன் கல்வி வளர்ச்சிக்குகந்த பல நடவடிக்கைகளை நாவலர் மேற்கொண்டார்,

அக்காலத்தில் யாழப்பாணத்தில ஆறுமுகநாவரின் இலட்சியங்களினாலும் முயற்சிகளினாலும் ஈர்க்கப்பட்ட பெரியார்களுட் குறிப்பிடத்தக்க ஒருவர் கந்தையா உபாத்தியாயர் ஆவர். வரலாற்றுப்புகழ்மிக்க கிராமமான கந்தரோடையில் அவதரித்த கந்தையா உபாத்தியாயர் சுற்றுப்புறங்களில் வாழ்ந்த மக்களின்பால் தன் பார்வையைச் செலுத்தினார், அவர்கள் வறுமையிலும் அறியாமையிலும் உழன்று பின்தங்கிக் கிடந்தமையினை அவதானித்தார், அவர்களுக்குக் கைகொடுத்து உதவும் வலிய முயற்சியினை மேற்கொள்ளச் சித்தமானார். அதன் பலனாக அமைந்த ஆங்கிலப் பாடசாலைதான் பெருமைப்படத்தக்க சாதனைகளை நிலைநாட்டிய ஒரு கல்லூரியாக வளர்ந்து நூற்றாண்டு விழாவினை மிடுக்குடன் கொண்டாடுகிறது,

கந்தையா உபாத்தியாயரின் குறிக்கோளை முன்னெடுத்துச் சென்றதில் கொடைவள்ளலான டாக்டர் எஸ். சுப்பிரமணியத்துக்குப் பெரும் பங்குண்டு. கந்தையா உபாத்தியாயரின் சிந்தையில் உதித்த கல்விநிலையத்துக்கு அவரைத் தொடர்ந்து முகாமையாளரான டாக்டர் சுப்பிரமணியம் நற்கருமங்கள் பலவற்றுக்கு ஆதரவளித்தவராவர். பேராதைனப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டிக்கு முதற் பரிசான தங்கப்பதக்கத்தை வழங்குமாறு 1959ஆம் ஆண்டு அவரை நாடிக் கேட்ட சம்பவம் என் நெஞ்சில புசுமையாக உள்ளது. முதலில் நாங்கள் போய்க் கேட்டபோது நோயாளரைப் பார்த்துக் கொண்டு நின்ற டாக்டர் எங்களைக் கடிந்து துரத்திவிட்டார். சற்று நேரங் கழித்து அவர் ஓய்வாக நின்ற போது மீண்டும் சென்றோம். ஜன்னல் வழியாக எங்களைக் கண்டவர் புன்னகை பூத்த அன்போடு அழைத்துத் தகரப் பெட்டியொன்றைத் திறந்து நூறு ரூபா நோட்டொன்றை எடுத்து நீட்டினார். ஒரு பவுண் பதக்கமொன்று செய்வதற்கு அன்று அப்பணம் போதியதாயிருந்தது.

டாக்டர் சுப்பிரமணியத்துக்குப் பின் கல்லூரி முகாமையாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் தாராளமனப்பான்மையும் அன்புள்ளமும் எளிமைப் பண்பும் பொருந்தியவர், பரந்த மானிட நேய நோக்கங்கொண்ட பல கருமங்கள் ஸ்கந்தாவில் நிறைவேற அவர் பக்கபலமாக நின்றார்.

கல்விநிலையமொன்று சிறப்பதும் நற்பயன் நல்குவதும் பெருமளவுக்கு அதன் ஆசிரியர்களைப் பொறுத்ததாகவே அமையும். அந்த வகையில், ஆசிரியத் தொழிலை ஜீவனோபாயத்துக்குரிய ஒன்றாக மட்டும் கொள்ளாது அர்ப்பண சிந்தையுடன் தன்னலமற்ற சேவையினை ஆர்வத்தோடு அளிக்க உடன்பட்ட பல ஆசிரியர்கள் ஸ்கந்தாவுக்கு வாய்த்தனர். பலருக்கு இலட்சிய புருஷர்களாகத் திகழத்தக்க பண்புகளை அவர்கள் பெற்றிருந்தனர்.

இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்த ஆண்டுமுதல் சுமார் பத்தாண்டுகள் அங்கு கற்றவன் அக்காலப் பகுதியைத் திரும்பிப் பார்க்கும்போது அந் நல்லாசிரியர்களைப் பற்றிய நினைவுகள் நெஞ்சில் எழுகின்றன. பரந்த மானிடப் பார்வையினையும் சமதர்ம நோக்கினையும் எம் சிந்தையில் அவர்கள் தூண்டி விட்டிருக்கிறார்கள். அவ்வகையில் கல்லூரி அதிபராக 1944 முதல் 1962 வரை விளங்கிய ஒறேற்றர் சி.சுப்பிரமணியமும் பொதுவுடமை இயக்கத்தில் ஈடுபட்ட வி.பொன்னம்பலமும் விதந்து குறிப்பிடத்தக்கவர்கள். வரலாற்றையும் அரசியலையும் விளங்கிக் கொள்ளப் பயிற்றியவர்களுட் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்வித் துறைப் பேராசிரியரான ப.சந்திரசேகரமும் இன்று அப்பல்கலைக்கழக உடற்பயிற்சிப் பணிப்பாளராக உள்ள சி.தியாகராஜாவும் முதன்மையானவர்கள். தமிழார்வம் என் உள்ளத்தில வளரக் காரணமானவர்களுள் வித்துவான் சி.ஆறுமுகம், சி.பொன்னம்பலம், விஸ்வநாதக் குருக்கள், பண்டிதர் வி.நடராசா ஆகியோர் மறக்க முடியாதவர்கள். ஆங்கில மொழியோடு எங்களைப் பரிச்சயப்படுத்த முருகேசு மாஸ்ரர், லோட்டன் செல்வரத்தினம், ஒறேற்றர் முதலானவர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல, ஒழுங்கு பணிவுடைமை, தூய்மை, பொறுப்புணர்ச்சி, செய்வன திருந்தச் செய்யும் பண்பு முதலானவற்றை மாணவர்களிடம் வளர்க்க அவர்கள் பல உபாயங்களைக் கையாண்டனர்,. அழகு, உண்மை, நன்மை ஆகியவற்றைப் பேணிவளர்க்கும் ஆர்வத்தினைத் தமது மாணவர் உள்ளங்களில் தூண்டிவிட அவர்கள் முயன்றனர். அவ்வாறு முயன்றவர்களுள் 1962 முதல் 1969 வரை கல்லூரி அதிபராகப் பணியாற்றிய வி.சிவசுப்பிரமணியமும் துணை அதிபராக 1976 இல் இளைப்பாறிய க.சிவகுமாரனும் அவசியம் நினைவுகூரப்பட வேண்டியவர்களாவர்.

உயர்ந்த இலக்குகளை நோக்கி, தகுந்த ஆசிரியர்களைத் தேடித் தக்கவாறு ஒரு கல்லூரியைக் கட்டியெழுப்புவதில் அதிபரின் பங்கு மகத்தானதாகும். எங்கள் காலத்தில் கல்லூரியின் அதிபராக விளங்கிய ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் தெளிவான நோக்கங்களையும் அபிப்பிராயங்களையும் கொண்டிருந்தார். துணிவும் தன்னம்பிக்கையும் செயலாற்றலும் பரந்த மனிதாபிமானமும் உடையவராக அவர் திகழ்ந்தார். ஒதுக்கப்பட்டவர்களுக்கும் ஏனைய பாடசாலைகளினால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் கல்வியின் வாய்ப்புக்களைக் கிட்டச் செய்து இருண்ட முடுக்குகளிலும் அறிவொளியைப் பரப்பித் தாழ்வுற்று வறுமை மிஞ்சிச் சுதந்திரம் தவறிக் கெட்டு' நின்றவர்களை வாழ்வித்த அவரது பணிகள் மகோன்னதமானவை. 295 மாணவர்களையும் 13 ஆசிரியர்களையும் 15 வகுப்பறைகளையும் கொண்டிருந்த ஒரு பாடசாலையை 2045 மாணவர்களையும் 61 ஆசிரியர்களையும் 57 வகுப்பறைகளையும் விசாலமான விளையாட்டு மைதானங்களையும் விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் மாணவர் விடுதிகளையும் உடையதோர் அதியுயர்தரக் கல்லூரியாக அவர் வளர்த்தார். "உபாத்தியாயர் ஒரு பாடசாலையை உருவாக்கினார். ஒறேற்றர் ஒரு கல்லூரியை உருவாக்கினார்" என்று மதிப்புக்குரிய கல்விமானாகிய ஏ.எம்.ஏ.அஸிஸ் கூறியமை இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.

அக்காலத்தில் துணை அதிபராகப் பணியாற்றிய ஒறேற்றருக்குப் பின் அதிபரான வி.சிவசுப்பிரமணியம் கல்லூரியின் பணிகளுக்கும் ஒழுங்குக்கும் உயர்வுக்கும் நான்கு தசாப்தங்களுக்குமேல் அத்திவாரமாக அமைந்த பெருமகனாவார். கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் மாணவர் நலனுக்காகவும் அவர் தம்மை முற்றாக அர்ப்பணித்தவராவர். ஒறேற்றரின் இலட்சியங்கள் பல சிதறிப் போகாது நற்பயன் விளைக்கப் பொருத்தமான வகையில் 'கருமமே கண்ணாகச்' செயற்பட்டவர் அவர். அந்த வகையில் அவரோடு சேரப் போற்றுதலுக்குரியவர் க.சிவகுமாரன் ஆவர்.

கல்வி அறிவினை வழங்கியதன் மூலம் ஊர் முன்னேற உதவிய ஸ்கந்தா தேசவளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்புச் செய்துள்ளது. கல்வி, விஞ்ஞான, மருத்துவ, முகாமைத்துவ, நிர்வாகத் துறைகளில் உயர்நிலையெய்திய பலர் ஸ்கந்தாவினால் உருவாக்கப்பட்டவராவர். எண்ணற்றவர்களின் உள, உடல், ஆரோக்கியத்துக்கு ஸ்கந்தா சீரிய பணியாற்றியுள்ளது. சமயம், ஒழுக்கம், உடற்பயிற்சி ஆகிய துறைகளிலும் அது வெகுவாகக் கவனஞ் செலுத்தியது. ஆன்ம நேயத்தை அடிப்படையாகக் கொண்ட சமய உணர்வையும் ஏனையவர்களுடன் முறையாக நடந்துகொள்ள உதவும நல்லொழுக்கப் பண்புகளையும் மாணவர் மத்தியில் வளர்க்க 'உண்மையே உயர் அறம்' எனும் குறிக்கோளுடன் ஸ்கந்தா என்றும் முயன்று வந்துள்ளது.

மனித கௌரவத்துக்கும் சமூக நீதிக்கும் மதிப்பளித்துத் தாழ்த்தப்பட்டவர்களையும் அணைத்துக் கொண்ட பெருமையும் ஸ்கந்தாவுக்கு உரியது. பிறப்பினால் கீழானவர்கள் என ஒரு பகுதியினர் ஆவேசமாக ஒதுக்கப்பட்ட ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கிய முதலாவது இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரை ஸ்கந்தா ஈட்டப் பெருமளவுக்குக் காரணமானவர் ஒறேற்றர். மேடைகளின் மேல் நின்று சாதிப் பிரிவினைகளை ஒழிப்போம் என்று பேசிய பலர் செயலில் இறங்க அஞ்சித் தயங்கிய ஒரு காலகட்டத்தில் ஒறேற்றர் துணிவுடன் மேற்கொண்ட நடவடிக்கை,

"மேலவர் கீழவர் இல்லை – இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை
நாலு தெருக்களின் கூட்டில் – மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று – சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்"

என்ற மகாகவி பாரதியைப் பற்றிய பாரதிதாசனின் கவிதையடிகளை நினைவு படுத்துவதாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சிந்தனையுடன் பாகுபாடின்றி மனிதர் அனைவர்க்கும் கதவுகளைத் திறந்துவிட்ட 'ஸ்கந்தவரோதய எங்கள் கல்லூரி' என்று நவீன காலத்தில் நாம் பெருமைப்படலாம். சிங்களவர்களும் முஸ்லிம்களும் எங்கள் கல்லூரியில் மகிழ்வோடு கற்றார்கள். வசதி குன்றிய மலையக மாணவர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கியது எங்கள் கல்லூரி. கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபராக விளங்கிய எஸ்.ஏ.விஜெயதிலக, மக்கள் சீனக் குடியரசுக்கு முதல் இலங்கைத் தூதுவராகச் சென்ற வில்மட் ஏ.பெரேரா, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அதிபராகத் திகழ்ந்த ஏ.எம்.ஏ.அஸீஸ், ஜி.பி.விக்ரமனாயக்க முதலான தென்னிலங்கையைச் சேர்ந்த கல்விமான்கள் பலர் எங்கள் கல்லூரிப் பரிசளிப்பு வைபவங்களில் கலந்து கொண்டு கல்வியினதும் தேசத்தினதும் எதிர்காலம் குறித்துதமது கருத்துக்களையும் கனவுகளையும் விரித்துரைத்திருக்கிறார்கள். மனிதநேயத்தை மேம்படுத்த மட்டுமன்றித் தேசியப் புரிந்துணர்வை வளர்க்கவும் பலவாற்றானும் வலிய முயற்சிகளை மேற்கொண்ட பெருமை எங்கள் கல்லூரிக்கு உரியது.

# ஆரோக்கிய சமுதாயத்தை நோக்கி.....

Dr.N. சுப்பிரமணியம்

நம்மில் பலர் சதா மருந்துகளையும், மாத்திரைகளையும் டாக்டர்களின் அலோசனைக்கமைய எடுத்துக் கொண்டிருந்தால் தான் சுகமாக வாழ முடியும் என்று நினைக்கிறார்கள். இதனால் இவர்கள் சதா டாக்டர்களைத் தேடிஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு டாக்டரால் திருப்தி கொள்ளாது சிலர் பல தரப்பட்ட மருத்துவ நிபுணர்களைப் பார்த்து ஆலோசனை பெறுவதோடு சதா மாறி மாறி மருந்துகளை சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இதனால் டாக்டர்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கிறது. குறிப்பிட்ட நோயும் தீர்ந்தபாடில்லை. இந்த நிலையை நினைக்கும் பொழுது எனக்கொரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு வைத்திய நிபுணரின் மகன், தான் வருங்காலத்தில் எந்த வைத்திய துறையை தேர்ந்தெடுக்கலாம் என்று கேட்கிறார். அதற்கு அவரின் தந்தை "மகனே தோல்வியாதிகளை பற்றிய துறையில் சிறப்பாகப்படித்துப் பட்டம் பெறு" என்று கூறுகிறார். அதற்கு மகன், "அப்பா எவ்வளவோ சிறப்புக்கள் பொருந்திய மருத்துவத்துறைகள் எல்லாம் இருக்கையில் நீங்கள், நான் தோல்வியாதியில் சிறப்புப் பட்டம் பெற வேண்டும்என்று ஏன் கூறுகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு வைத்திய நிபுணரான தந்தை, மகனே! நமது நாட்டில் இவ்வியாதி அதிகமாகவுள்ளது. ஆகவே அதிக பணம் சம்பாதிக்கலாம். தோல்வியாதிக் காரர்கள் இரவு நேரங்களில் வந்து தொந்தரவு செய்யமாட்டார்கள். மேலும் இந்த தோல்வியாதியை கூடிய சீக்கிரத்தில் சுகமாக்கிவிட முடியாது. ஆகவே உனக்கு நிரந்தரமாக நோயாளர்கள் வாடிக்கையாக வந்துகொண்டே இருப்பார்கள்" என்று கூறினார்.

பீலிக்ஸ்மேன் என்ற பிரித்தானிய டாக்டர் ஒருவர் இப்படி கூறுகிறார். நம்மவர்களில் சிலர் நல்ல சுகதேகியாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் இருக்கிறார்கள். மகிழ்ச்சி! வேறு சிலர் சதா நோயாளர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அதிகமானவர்கள் இந்த இரண்டு நிலைக்கும் இடைப்பட்டவர்களாக காணப்படுகிறார்கள். இவர்கள் எப்பொழுதும் நோயாளர்களாகவும் இல்லை, நல்ல ஆரோக்கியம் உடையவர்களாகவும் இல்லை. இந்த இடைப்பட்ட நிலையிலுள்ளவர்கள் மிகவும் அதிகம். இவர்கள் நன்றாக சிந்தித்து செயல்பட்டால் நல்ல ஆரோக்கியம் உள்ளவர்களாக தம்மை ஆக்கிக் கொள்ள முடியும். இல்லையேல் சதா நோயாளர்களாக மாறவும் முடியும். ஆரோக்கியம் என்பது ஒரு வாழ்க்கைமுறை. இதை டாக்டர் ஒருவர் நோயாளி ஒருவருக்கு கூறும் அறிவுரைகளாலும், மருந்துகள் எடுப்பதாலும் மாத்திரம் அடைந்துவிட முடியாது. ஆரோக்கியம் (Health) என்பது நாம் அன்னையின் வயிற்றில் கருக்கட்டும் காலத்திலிருந்தே ஆரம்பமாகிறது. குழந்தை வயிற்றிலிருக்கும் பொழுது தாயின் மனநிலை, குழந்தையின் ஆரோக்கியத்திற்காக தாய் மேற்கொள்ளும் பக்குவம், தாயின் உணவு, உடை, தூய்மை, ஓய்வு, தேகப்பயிற்சி இன்னோரன்ன செயல்கள் நல்ல சுகப்பிரசவத்திற்கும், பிறந்தபின் தாயின் அரவணைப்பில் வாழும் குழந்தை தாய் தந்தையோரின் அறிவு, பழக்கவழக்கம் சூழல் முதலிவைகளை அடிப்படையாக வைத்தே தமது வாழ்நாட்களை தயார் செய்கின்றது. அதனால்தான் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கூறுகிறார்கள். ஆகவே சிறந்த ஆரோக்கியம் அறிவும், அன்பும் திறமையும், தாய் தந்தையரின் சிறந்த வாழ்க்கை முறையிலேயே தங்கி இருக்கிறது.

நம் நாட்டுப் பெற்றோர்கள், முதலில் குடும்பத்தில் அமைதிகாக்க வேண்டும். நல்ல பண்புள்ளவர்களாக இருக்க வேண்டும், நல்ல கல்வியறிவும், பகுத்தறிவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். பொதுவாக ஆரோக்கிய வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை அறிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும். தாம் வளர்க்கின்ற தமது குழந்தைச் செல்வங்களுக்காக , பீடி, சிகரெட், மதுபானம், பாவிக்கக்கூடாது. நம்மில் எத்தனை தாய் தந்தையர்கள் மதுபானம் குடிக்கிறார்கள்! அவர்களின் குழந்தைகள் பெரியவர்களாகும் பொழுது பெற்றோர்கள் எவ்வாறு மதுபானத்தை, சிகரெட்டை, தனது பிள்ளைகள் குடிக்கக் கூடாது என்று கூறமுடியும். மதுபானத்தால் சிகரெட்டால் ஏற்படும் வியாதிகள் எத்தனை! எத்தனை!! பொங்கி எழும்பும் கோபம், அதனால் தாய்தந்தையரிடையே எழும் அனாவசிய சண்டைகளும், அதன் விளைவாக நம் குழந்தைகளிடையே ஏற்படும் மனோவழித்தாக்கங்களும் சொல்லும் தரமானவையல்ல. நமது நாட்டில், ஹெரோயின் பாவிப்பவர்களையும், மதுபானம் குடிப்பவர்களையும், கொலையாளிகளையும், மேலும் குற்றச் செயல் செய்து சிறையில் உள்ளவர்களையும் கவனத்திற்கு எடுத்து நோக்குவோமானால், தாய்தந்தையர்கள் அறிந்தோ அறியாமலோ வாழ்ந்த வாழ்க்கை முறைகள் எவ்வாறு எத்தனை பேர்களின் வாழ்க்கையையும் பாழாக்கியுள்ளது என்பது நன்றாகப் புலப்படும்.

சுருங்கக் கூறினால், நல்ல ஒரு ஆரோக்கியமான சமுதாயம் உருவாக, நல்லறிவும், விவேகமும், நன்னடத்தையும் குழந்தையின் வாழ்வில் அக்கறையும் உள்ள பெற்றோர்கள் அவசியம், மற்றெல்லாம் இவர்களுக்குப் பின்னால்தான்!

# "ஞானத்தின் மூலம்"

S. மோகனதாஸ் - நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்

வாழ்க்கை என்னும் சமுத்திரத்தில் "சம்பவங்கள்" துளிகள் ஆகும். காற்றின் தன்மைக்கேற்ப அலைகளின் வேகம், வீச்சு மாறுபடுவதுபோல வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள், இன்ப-துன்பங்கள் ஏறி இறங்குகின்றன. வாழ்க்கையில் நடக்கும் சிறு சம்பவங்கள் நமக்கு உணர்த்தும் பாடங்கள் படிப்பினைகள் ஏராளம்; ஊன்றிக் கவனிப்பவனுக்கு கிடைக்கும் அனுபவ ஞானம் ஏராளம், ஏராளம்...........

எனது ஸ்கந்தவரோதையாக் கல்லூரி வாழ்க்கையில் நடைபெற்ற சில சம்பவங்கள், மனித வாழ்க்கையின் வெவ்வேறு முகங்களை பரிமாணங்களை எங்களுக்கு உணர்த்துகின்றது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அரும் பணிகள் ஆற்றிய ஆசிரியர்கள் மா. கதிரிப்பிள்ளை, செபஸ்ரியாம்பிள்ளை, செல்லையா, சிவகுமாரன், மாணிக்கவாசகர், துரைராஜா போன்றவர்கள் சம்பந்தப்பட்டிருப்பது இச்சம்பவங்களுக்கும் மேலும் மெருகூட்டுகின்றது.

நான் G.C.E.(A/L) இரண்டாமாண்டு கணிதம் கற்றுக்கொண்டிருந்த காலம். எங்களுக்கு ஆசிரியர் மாணிக்கவாசகர் தூயகணிதம் கற்பிக்க வருவார். அன்று ஏனோ வரவில்லை. பக்கத்து வகுப்பில், ஆசிரியர் துரைராஜா பௌதிகம் கற்பித்து கொண்டிருக்கிறார். அவ் வகுப்பில் நாம் கலந்துகொண்டோம்! இத்தருணத்தில் மாணிக்க வாசக மாஸ்டர் எங்கள் வகுப்புக்குள் வந்துகொண்டிருக்கிறார். நாங்கள் மீண்டும் துரைராஜா மாஸ்டரின் அனுமதியில்லாமல் எங்கள் வகுப்புக்குள் வந்தோம். இதை அவதானித்த மாணிக்க வாசக மாஸ்டர் என்னை அழைத்து, "நீ எனது வகுப்புக்குள் விரும்பிய நேரம் என் அனுமதியின்றி வரலாம் போகலாம், ஆனால் நீ துரைராஜா மாஸ்டரின் வகுப்புக்குள் இப்படி நடந்துகொள்வது சரியல்ல" என்றார். என் கண்கள் பனித்தன. "கண்பார்வையற்ற" துரைராஜா மாஸ்டரின் பலயீனத்தை நான் துஷ்பிரயோகம் செய்ததை நளினமாக திருத்தும் மென்மையான சாதுர்யம்!

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மாபெரும் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆசிரியர் செபஸ்டியாம்பிள்ளை கணிதப் பகுதிக்கு பொறுப்பாக இருக்க, நானும் நண்பன் துரைசிங்கமும் அவருக்கு எங்களாலான உதவிகளை செய்துவந்தோம். ஆசிரியர் செல்லையாவும் இப்பகுதிக்கு கணிசமான பங்களிப்பு செய்து இருந்தார். பொதுவாக கணிதப் பகுதி வரட்சியான உயிர்த்துடிப்பற்ற துறை. நாங்கள் எங்கள் சொல்லாற்றலால் அந்தப் பகுதிக்கு உயிர்துடிப்பு அளிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். ஒலிபெருக்கியில் திடீரென அறிவிப்பு. ஒரு புதிர்க் கணக்கைச் சொல்லி அதைத் தீர்ப்பவருக்கு "இன்ன" பரிசு தரப்படும் என்பதே அவ் வறிவிப்பு ஆகும். அதைத் தொடர்ந்து செல்லையா மாஸ்டர் பரக்கப் பரக்க ஓடி வந்து எங்களை தயார் படுத்துகின்றார். அரைமணி நேரத்தின்பின் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் முருகையாவும், அவர் பின்னால் சில மாணவர்களும் கணிதப் பகுதிக்குள் "குபு", "குபு" என பிரவேசிக்கின்றார்கள். பிறகென்ன தெட்சணா மூர்த்தியின் தவில் கச்சேரிதான்.

ஒரு ஆசிரியரின் சாதுர்யம், உயிர்த்துடிப்பற்ற கணிதப் பகுதியை உயிர்பெறச் செய்கின்றது.

G.C.E.(A/L) பௌதீகக் கூடம். நான் எனது பரிசோதனையை முடித்துவிட்டு என்ன செய்வது என்றுதெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆசிரியர் துரைராஜா இன்னொரு மாணவனுக்கு பௌதிகப் பரிசோதனையை விளக்கிக் கொண்டிருந்தார். நான் அவருக்கண்மையில் சென்று, அவரது விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென "பக்கத்தில் நிற்பது யார்?" என்று ஆசிரியர் கேட்டார். நான் மௌனமாக மரமாகி நின்றேன். "யாரது?" என்று குரல் ஓங்கி ஒலித்தது. எவரும் பதில் சொல்லவில்லை. உணர்வுகள் அடங்கி, தன்னுக்குள் அமிழ்ந்து விட்டார் துரைராஜா மாஸ்டர். பிற்பாடு, தனக்கு "மிகவும் நம்பிக்கையான" ஆட்களிடமிருந்து எனது பெயரைக் கண்டுபிடித்தும், இந்தச் சம்பவத்தை மன்னித்து மறந்து விட்டதுதான் இந் நிகழ்சியின் சிகரம்.

கண் குறைபாட்டின் பலம் (மானசீகமாக உணர்தல்) உணர்ச்சிமயமாக, அடங்கி, தன்னுக்குள் அமிழ்ந்து, அறிவு பூர்வமாக மாறுவதை இச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

கல்லூரி என்பது மணல்,சீமேந்து, நீர் இவற்றிலான வெறும் கட்டடமல்ல. அங்கு வாழ்ந்து வரும் மாணவ-ஆசிரியர்களின் இயக்கச் சமநிலையின் வெளிப்பாடே ஆகும்.

# Kasi Kugapalan

Kasi Kugapalan is one of the historic sons of Skanda, who received a record in the Guineus Book of record in 1991, when he was a partner researcher of the work done to produce "Wide Fax"

He began his primary education in Colombo and later in 1965 shifted to Skanda and continued Schooling till 1972. He completed his College education successfuly in 1972 and joined Law College in Colombo and qualified in law. While in Law College he registered himself in.

He completed his studies within the shortest possible time and left for United Kingdom for further studies on the same fields.

Today he holds the qualification of FCMA, FCIC and FCA and a Solicitor from University of Oxford.

He works as a consultant to Wide Com group Inc of Ontario, Canada which produces "The largest facsimile machines. "Widefaxe" was invented by a group of scientists in which Kasi Kugapalan ranks important. Widefax has scanning and printing facilities upto 60.96 cm 24 in.

Skanda Wish him success in every progress.

**- Dr (m/s) S. Thanapalasingham**
(Comitee Member)



# "யாமார்க்கும் குடியல்லோம்"

S. சிவகுரு (MRT Ceylon)

சிறு வயதில் தந்தையை இழந்த என்னை சிறிய தந்தையார் தத்தெடுத்தபோது எனக்கு வயது இரண்டு. சுன்னாகம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் எனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, அவ்வூர் மயிலணி சைவவித்தியாசாலையில் ஏழாம் வகுப்புவரை கல்வி பயின்றேன்.

என்னுடன் கல்விபயின்ற மாணவர்கள் ஐந்தாம், ஆறாம் வகுப்பு சித்தியடைந்தவுடன் உயர் கல்வியை கற்கும் நோக்குடன் பெரிய கல்லூரிகளை நோக்கிச் சென்று விடுவது வசதி படைத்தவர்களின் வழமை!

வசதி படைத்த சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் நன்கொடை, வைப்புப்பணம் செலுத்தி, பிரயாணச் செலவும் செலுத்தி அல்லது விடுதிச் செலவும் செய்து, நகரங்களில் உள்ள கத்தோலிக்க, அமெரிக்க மிசன் கல்லூரிகளுக்குச் சென்று உயர் கல்வியைக் கற்றார்கள்.

அன்றைய கால நெருக்கடியில் இந்து சபையால் நடாத்தப்பட்டு வந்த ஒரு சில கல்லூரிகளில் சிறுபான்மை சமூகத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இப்படியான கால கட்டத்தில் என்போன்ற வசதியற்ற சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் எந்தக் கல்லூரிகளிலும் அனுமதி பெறமுடியாத நிலையில் இருந்தோம். இதனால் திறமை எவ்வளவோ இருந்தும், என்போன்ற மாணவர்கள் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் கற்கும் வாய்ப்பினை இழந்து வந்துள்ளோம்.

ஏழாம் வகுப்பினை நான் சித்தியடைந்ததும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மேற்படிப்பிற்காக அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தேன். அக்கல்லூரியால் நடாத்தப்பட்ட அனுமதிப் பரீட்சையில் ஆங்கிலத்தில் 5 புள்ளிகளை மட்டும் நான் பெற்று, மற்றப்பாடங்களான கணக்கு, தமிழ் பாடங்களுடன் 196 புள்ளிகளை பெற்றுக் கொண்டேன்.

எனக்கு கிடைத்த புள்ளிகளை ஆச்சரியத்துடன் நோக்கிய காலம் சென்ற மதிப்பிற்குரிய அதிபர் 'ஒரேற்றர்' C. சுப்பிரமணியம அவர்கள் J.S.C."C" வகுப்பிற்கு அனுமதி வழங்கினார். காலம் சென்ற முன்னைய உப அதிபர் சிவகுமாரன் மாஸ்டர் வகுப்பாசிரியராகவும், கணித ஆசிரியராகவும் காலம் சென்ற முன்னைய இக்கல்லூரியின் அதிபரான நாகரத்தின மாஸ்டர் விஞ்ஞான ஆசிரியராகவும், முன்னைய அதிபரான தியாகராஜா சரித்திர, குடியியல் ஆசிரியராகவும் எனக்கு அவ்வகுப்பில் கல்வி கற்பித்தார்கள் என்று எண்ணும்போது, இன்றும் என் மனம் பூரிப்படைகின்றது. அதேவேளை கணித்தையும் விஞ்ஞானத்தையும் ஆங்கிலத்தில் கற்கவேண்டி வந்தது எனது துர்ப்பாக்கிய நிலையே.

என்னை இனம் கண்டு கொண்ட திருவாளார்களான சிவகுமாரனும் நாகரத்தின மாஸ்டரும் என்னிடம் ஒருவித திறமை இருப்பதைப் புரிந்து கொண்டு ஆங்கிலத்தை எளிய முறையில் புரியும் வகையில் அவ்விரு பாடங்களையும் திறமையாக கற்றுக்கொடுத்து N.P.T.A. பரீட்சையில் சித்தியடைய செய்வித்தமை அவர்களின் உயர் குணங்களைப் பிரதிபலித்துக் காட்டின.

நான் சித்தியடைந்ததும் விஞ்ஞானக்கல்வி கற்கும் மாணவனாக தெரிவு செய்யப்பட்டு உப அதிபர் V. சுப்பிரமணியம், அதிபரான 'ஒரேற்றர்' C. சுப்பிரமணியம் போன்றவர்களிடம் கல்வி பயிலும் வாய்ப்பு இறைவன் அருளால் கிட்டியது.

நான் S.S.C. வகுப்பில் கல்வி பயின்று வந்த சமயம் சிறு அசம்பாவிதம் ஒன்று எனக்கு ஏற்பட்டது. அப்போது அதிபர் எனக்கு தாழ்வு மனப்பான்மை இருப்பதைச் சுட்டிக் காட்டினார். அதனை எனது மனத்திலிருந்து நீக்கிவிடும் வண்ணம் அறிவுரையும் வழங்கினார்.

நான் அக்கல்லூரியல் கல்வி கற்ற வேளை விண்வெளி வீரர் மேஜர் யூரி ககாரின், குன்றக்குடி அடிகளார், போன்ற பெரியோர்களை சந்திக்க வாய்ப்புக் கிட்டியது.

ஒரு தடவை புரட்சி அதிபர் "ஒறேற்றர்" C. சுப்பிமணியம் ஐயா, என்னைப் பார்த்து "உங்கள் சமூகம் கல்வியறிவை சிறப்பாக கற்பதன் மூலமே 'யாமார்க்கும் குடியல்லோம்' என்னும் பதத்தைப் பலப்படுத்த முடியும்" எனக்கூறியது இன்றும் எனது மனதைவிட்டு அகலவில்லை.

எமது கல்லூரி நூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளை அக்கல்லூரியும், அதன் ஆசிரியர்களும் குறிப்பாக மதிப்பிற்குரிய புரட்சியும் சமதர்மவாதியுமான 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் எமது சிறுபான்மை சமூகத்திற்கு செய்த தொண்டையும், அவர்களில் பலரை இன்று உயர் பதவிகளில் பதவி வகிக்க ஆக்கியமையும் எம்மவர் மறக்க முடியாத தொன்று! இதனை ஞாபகப்படுத்த நான் கடமைப் பட்டுள்ளேன்!

# Orator" Subramaniam of Skanda

*"The evil that men do lives after them;*
*the good is oft interr'd with their bones;*
*Let it NOT be so with Orator!"*

Known more by the soubriquet, and, affectionately at that, "Orator" Subramaniam, the doyen of Skanda Varodaya College, heralded a new era in Education in the North. His was a philosophy which militated against the MORES of the time, a revolutionary philosophy of a brave new World free from the shackles of an Imperialist policy, a world in which every child would be afforded and opportunity to develop his personality to the full, while at the same time acquiring an animated patriotism as a child of Mother Lanka. His Association and strong ties with the Founders of the Youth Congress in the persons of Prof. Nesiah, Principal Handy Perinbanayagam, coupled with his own liberal outlook helped him on in his endeavours. Orator's indefatigable energy, his commitment to any task, his genial sense of humour, and, above all, his philanthropic nature made it easy for him to carry out the preliminaries for which successes were to follow.

He had already made such a name for himself as an efficient teacher of English that one day in July 1944 he was called upon to preside over the destinies of a small school in a remote but historical hamlet, about eight miles away from the Provincial Capital, Jaffna. This was the opportunity eagerly awaited by Orator; and the first thing he did was to throw open the school to all children irrespective of caste, creed or language. As he conveyed this to the Founder, who lay on his death-bed, tears of joy streamed down the Founder's cheeks, and he replied, "Have you not done it yet?" This was "Divine Acceptance" to Orator, who plunged wholeheartedly into the task. Assisted by the Staff he set about the task of re-organisation with a great resolution.

Improvement of the ethos of the school was what was needed most, but it had to be built up step by step. The task was enormous; lesser mortals would have succumbed, but to "Orator" nothing was impossible if only one had the will to do it. It was in adversity that he shone. He travelled far and widein his quest for qualified teachers. He did not spare even India. By the end of 1946 a change in the atmosphere was seen. Convinced of the truth that the development of a child would be lopsided without Sports, he quickly turned his attention to Sports. The House system was introduced and many sportsmen were appointed to the staff. Young men in the flower of their youth, for the first time, adorned the Staff. They brought a new look to the school. They all rallied round "Orator" and worked sincerely and wholeheartedly, day and night, on week ends and holidays, to raise the school to Grade I. Orator had succeeded in his mission and his dreams were realised. From a Village school with a roll of about 200, by the end of his tenure in 1963, he had on roll more than 2500 students. The school shone in every area of Education. The various teams became champions in Soccer, Athletics at the Inter-School Meets conducted by the Jaffna Schools' Sports Association. At Cricket which was started with great enthusiasm in 1948, we were often an unbeated side. Indoor games like Badminton and Table Tennis were introduced and every hosteller was made to play some game after school.

Administering a school with a roll of over 2000 children is not easy; but to build it up is far more difficult. Orator performed these tasks admirably. He grappled with the strange vicissitudes of Fate and overcame them. His diplomacy was "Par excellence". I, as one of the young teachers recruited by orator had the good furture to work ciosely with him and, therefore had an insight into his diplomacy

It was the 14th of October, 1946 - my first day at Skanda. I was at the school very early. Shortly after my arrival two "gangs" armed with bicycle chains, batons and knives, arrived at the school as a consequence of two boys from adjoining hamlets having fought the previous day. This was something new to me. I must admit that I was "put off my feet." Orator arrived on the scene, having heard of the situation. He waked right into the midst of the "armies" and challenged the leaders to step forward. "If thuggery is what is required I can be a better thug than all of you," was the message. Within two shakes of a duck's tail the "brave" armies had vanished into thin air. A smiling Orator returned to the Office and told me. "Never be afraid to take the bull by the horns."

Another example of Orator's diplomacy was when, many years later, he dealt with a wayward student who just would not heed any advice. His conduct at school, whenever he was at school, was exemplary; but outside school, especially on the playing fields it was nauseating. And he was a senior member of the School Team. Normally a reliable player, he now began to miss the ball, much to the annoyance of his team-mates. Perhaps, he waw TWO balls when there was only ONE! In this aspect he had become incorrigible! Orator came to know of this. As I was the Prefect of Games at that time he asked me what we could do. I remained silent, engrossed in deep thought. Then Orator said, "I want to reform him. I wish to give him a position of responsibility." I heartily endorsed the idea. He left it at that and nothing was said or done thereafter, till one fine day, \months later, Orator dropped a "bombshell" at the weekly Assembly that the boy had been made a Prefect. Both students and teachers thought it was one of the many jokes which Orator was wont to crack. Whatever the immediate reaction was, the boy turned over a new leaf and thereafter was one of the best behaved boys both in and out of the school and went on to Captain the Team.

Neither was Orator without his sense of humour. Way down in 1951, it was, I think. I had ordered some Sports Materials from Diana & Co. and the Representative had arrived to collect the dues. Orator turned to Mr. Candiah, that legendary figure of Skanda and the custodian of the Finances. I reporduce the conversation between the two, verbatim.

| | |
|---|---|
| Orator: | Clerker, one moment please. |
| Mr. C: | Yes. coming, (C arrives Five minutes later) |
| O : | Have you got enough money to pay the dues? |
| C. : | I, I d-o-n-'t t h i n k so! (characteristic) |
| O : | Who the devil asked you to think, man? |

The conversation ended and the money was forthcoming. That was Orator, and this was Mr. Candiah.

The above revealed the closeness between the two, for with all his "idiosyncracies" Orator depended on him for everything. Mr Candiah himself was a legend at Skanda. He was the Financial Wizard, the Hostel Warden. the supervisor of works, all bundled into one. It was rumoured that he never slept. This was partly true, for try as anyone might, one could not see a bed in either of the two rooms Mr. Candiah ever entered. He was always at his table and the only rest he had was to lay his head on the table for about half an hour or one hour the most. There is an interesting anecdote about Mr. Candiah. The Jak tree in front of the Office was laden with ripe fruits. The smell was tempting. Fearing that the boarders may pluck them during the night, and wishing to give all the hostellers their share as also that of Orator and the staff, Mr'Candiah decided to mount guard. He moved from the inner office of the outer one and was at his table. The hostellers kenw exactly when Mr. Candiah would nod, and at the appropriate time plucked one of the fruit. Unfortunately for them, another was dislodged from its stem and fell down with a "thud". Mr. Candiah got up and seeing the boys running away, took possession of the fruits and placed them on the floor under his table and between his feet. so that any movement could be felt by him. He must have dozed again, for, when he awoke there were no fruits. He too had forgotten all about it till the next morning when the boys offered him his share, thanking him for the fruits which everyone in the Hostel shared.

An ardent follower of the political philosophy of John Locke, Orator beleved in the inherent goodness of man, Orator infused a new spirit into the traditional introverts the students of that time were. It was heartening to see a "new generation" of students living in perfect harmony and gay "camaradeiie" with mutual respect for each other. This was perhaps, his greatest achievement. The Dayanandas and Kulasuriyas were all admitted to the school and the Hostel improved. Sinhalese was introduced into the curriculum, and a monk, in the person of Rev. Unawatune Gunaratne Thero was appointed to the Staff. They were all very happy at Skanda. But, "Man proposes: God disposses". This was not to be for long; When the time came for them to say "Goodbye" they were loth to lave and one saw the tears well up in their eyes as they reluctantly boarded the C.T.B. 'buses that came to take them away much against their will!.

That Orator was thinking in terms of a liberalised educaiton akin to the Public School System of Eton and Harrow was evident from his action to inaugurate the House system and the Annual Inter-House Sports Meetings. This undoubtedly went a long way to inculcate in the students that much vaunted spirit of healthy competition. The boys learnt to treat Victory and Defeat alike. Further evidence of his liberal outlook was evident from his insistence on inviting luminaries from the majority community as Chief Guests at the Annual Prize-givings. Messrs. E.B. Wickremanayake, Wilmot Perera, S.A. Wijayatileka and Dr. A.W.P. Guruge were some of them. They came, they saw and they were conquered. They returned with happy memories of their visits. The bridges of understanding between the two major communities were strengthened; but good things do not last and the bridges collapsed very soon afterwards. But Orator did not lose hope. He contined to invite them and they contined to come and be conquered. Such was his faith in peaceful co-eistence!.

The last few years of Oraor's stewardship saw the school rise to great heights in many spheres of activity. The teams won the championships at the competitions conducted by the Jaffna Schools' Sports Association in Soccer - both First and Second elevens - and later, after the "take-over" of schools by the State, at the Inter Schools Meets held by the Dept. of Education. The year 1962 saw the Acme of glory for Skanda when no less than 43 out of the 55 who saat the G.C.E. (A/L) exam qualified for admission to the University. We were ranked second in the Island and first in the Peninsula. Very soon afterwards the school became a national School. Orator had realised his dream and a new Institution was to take its place in the North holding its own with the more sophisticated schools in the Island like Royal and St.Thomas' Teams form the South came down to the North to play matches against Skanda and Skanda recirocated.

Thus Orator brought to stay the political philosophy of Rousseau that all men are equal partners in the task of Nation-building. "Orator" Subramaniam is no more; but not so the ideals he strove to implant in the minds of the youth. They stand enshrined in the hearts of thousands of Old Students spanning the World. The O S A (colombo) is making arrangements to award scholarships in memory of Orator to deserving students to pursue Higher Educaiton, This is undoubtedly the best tribute one can pay to him. It deserves the generous support of all those who passed through his hands.

**S. Selvaratnam.**
(Retired Teacher)

# எங்கள் இனிய ஆசான் அன்பிற்குரிய தோழர் 'வி.பி'

எமது கல்லூரி ஸ்கந்தா நூற்றாண்டு விழா கொண்டாடும் இப்பொன்னான வேளையிலே எமது அன்புக்குரிய ஆசானும், 'கம்யூனிஸ்ட்' தோழரும், கல்லூரியின் பழைய மாணவருமான காலஞ்சென்ற திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் பற்றியும் ஓரிரு வார்த்தைகள் கூறாவிடின் இம்மலரும், நூற்றாண்டு விழாவும் பூர்த்தியாகிவிடாது.

'வ.பொ' (V.P.) என்பவருக்கு அறிமுகம் தேவையில்லை; அவரை அறியாதவர் அறியாதாரே! ஸ்கந்தாவில் கலைவிழாவா, பரிசளிப்பு விழாவா, பேச்சுப்போட்டி அல்லது விவாதப் போட்டியா, அரசியற் கலந்துரையாடலா 'வ.பொ' அங்கு இருப்பார்.

எவ்வளவோ அரசியற் கோட்பாடுகளைத் தம்மிடத்தே கொண்டும் பகையாளி ஒருவருமில்லாமல் ஸ்கந்தாவை பல்லாண்டுகாலமாக ஒரு பழைய மாணவராக, பண்பு மிகு ஆசிரியராக வலம் வந்த பெருமகன் இவர்.

ஆங்கில அறிவு சற்றுமில்லாதவர்கள் எல்லாரும் நீட்டுக்காற்சட்டை அணிந்து திரிந்த வேளையில் ஆங்கிலத்தில் விற்பன்னரான இவர் வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை அணிந்து புன்முறுவலுடன் தன் கடமைகளை சரிவரச் செய்த ஆசிரியமணி!

அவரது அரசியற் கோட்பாடுகளை ஏற்காதவர்கள்கூட அவரது மனிதப் பண்பை, நேயத்தை, மற்றவரைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை, எதிரிகளைக்கூட மதிக்கும் நேர்மையை, கடமையின் கண்ணியத்தை, போற்றுவார்கள்; அவரை ஏற்றுவார்கள்!

எந்த மொழியில் யார் உரையாற்றினாலும் அதை எமது தமிழ்மொழியில் மொழிபெயர்க்கும் அம்மாமனிதர் போல் எவரையும் யாரும் கண்டிலர்! இதனாலன்றோ மறைந்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் சங்கத் தலைவர் திரு. G.P. மலலசேகரா ஸ்கந்தாவின் பரிசளிப்பு விழாவொன்றில், "ஸ்கந்தா ஒன்றுக்கும் பயப்படத்தேவையில்லை; ஏனெனில் அவர்கள் வசம் ஒரு நடமாடும் 'மொழி பெயர்க்கும் இயந்திரம்' ஒன்றுள்ளது. அதுதான் 'வி.பி.'" என்று கூறி வியந்தார்!

இன்று அந்த அருமையான மனிதர் எம்மத்தியில் இல்லை! அவர் கனடாவில் காலமான செய்தி கேட்டு கலங்கி அழுதோர் கணக்கற்றோர்!

அன்னாருக்கும், ஒரேற்றர் ஐயாவுக்கும்........ அன்று அஞ்சலிக் கூட்டமொன்றை நடாத்தி ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்பு தனது நன்றியறிதலினைத் தெரிவித்துக் கொண்டது.

– 'இணுவை இரகு' –

# Short History of Skandavarodaya College.

Skandavarodaya College celebrates its Centenary this year, and I consider it a most appropriate occasion to glance through the 100 years of existence.

Skandavarodaya College - Jaffna is one of the pioneer seats of learning at Kanderodai, a village in Chunnakam, 5 miles North of Jaffna.

It was established in 1894 by a dedicated teacher the Late Mr. P. Kandiah and has been in existence for 100 years. During this period, it has won many laurels and achievements. Skandavarodaya College during its existence imparted education to people belonging to different walks of life - primarily aimed at accommodating the poor children to whom education was a mere luxury. The doors of this school were wide open to the poor and down trodden as a ray of light to brighten their future.

Skandavaradaya College which celebrates its centenary this year has a proud history of having produced many distinguished personalities in all professions. Her alumni are found in every nook and corner of the world.

Skanda which also excelled in Sports, Games and other extra cultural activities was honoured by the vist of Mahatma Ghanthi. Skandavarodayans, past and present have every reason to be proud of their Alma Mater.

Skanda is fully equipped with many class room blocks, meeting hall, hostel facilities, play grounds, library and laboratories for all science subjects.

It was the dedicated service of leading educationists like Orator Subramaniam that gave new dimension to the efficiency and growth of Skanda which will continue to play its vital and leading role in the history of Sri Lanka contributing its share in building the nation.

P. Suntharalingam.

# மறைந்தும் மறையாத மாமனிதர்

## ஒறெற்றர் சுப்பிரமணியம் ஒரு தத்துவம்

நாட்டின் கல்வி வளர்சிக்காக சிறந்த கல்விமான்கள், சிந்தனையாளர்கள், பேரறிஞர்கள் பலர் தம்மையே அர்ப்பணித்து சேவை புரிந்திருக்கிறார்கள். இந்த வகையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் பல்லாண்டு காலம் அதிபராகப் பணியாற்றிய ஒறேற்றர்சுப்பிரமணியம் கடந்த மாதம் தனது 92 ஆவது வயதில் மறைந்துவிட்டது கேட்டு கல்வி உலகமே கலங்கி நிற்கிறது.

ஒறேற்றர் சுப்பிரமணியம் ஸ்கந்தாவின் அதிபராக கடமையாற்றிய காலத்தில் அவரை விட திறமையும் வலிமையும் மிக்க பல அதிபர்கள் பல கல்லூரிகளில் அதிபர்களாக மிகச் சிறந்த பணியாற்றியிருக்கிறார்கள்.

ஆனால் இந்த ஒறேற்றர் மட்டும் அவர்களில் ஒரு தனித்துவம் மிக்க அதிபராக, ஆளுமை மிக்கவராக , மனித நேயம் கொண்டவராக மக்களன்பைப் பெற்றவராக, மாணவர்களின் இதயங்களை வென்றவராக வாழ்ந்ததே அவர் அதிபர் திலகமாக மதிக்கப்பட்டதற்கும் அவர் ஓய்வு பெற்று முப்பத்திரண்டு ஆண்டு காலத்தின் பின்பும் அனைவராலும் முழுமனதேடு போற்றப்படுவதற்கும் உண்மையான காரணம் என்பதை நன்றியுணர்ச்சி மிக்க எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஒரு காலத்தில் மன்னர்கள் அட்சி புரிந்த மகத்தான பல சான்றுகளைக் கொண்ட கந்தரோடைக் கிராமத்தில் கந்தையா உபாத்தியாயர் என்ற புண்ணிய சீலரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

1944ஆம் ஆண்டில் 'ஒறேற்றர்' ஸ்கந்தாவின் அதிபராக பதவியேற்ற போது 291 மாணவர்களையும் 15 ஆசிரியர்களையும் மட்டுமே கொண்டு சாதாரன 'பி' தர பாடசாலையாகவிருந்த கல்லூரியில் 1962இல் அவர் ஓய்வு பெற்ற போது 2045 மாணவர்களும் 61 ஆசிரியர்களும் 209 வடுதி மாணவர்களும் இருந்ததுடன் இது 1957 ஆம் ஆண்டிலேயே ஒரு அதிவிசேட கல்லூரியின் தரத்துக்கு (Super Grade) உயர்ந்திருந்தது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இக்கல்லூரி பெரும்புகழ் பெறுவதற்கு பின்னணியில் அல்ல முன்னணியில் நின்றவர் ஒறேற்றர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏன் இந்தியாவில் இருந்தும் கூட பல துறைசார் திறமைமிகு ஆசிரியர்களை அழைத்து வந்ததே கல்வி வளர்ச்சியில் இக்கல்லூரிக்கு கிடைத்த பெரு வெற்றி எனலாம். 1960ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத் தெரிவில் அகில இலங்கையில் மூன்றாம் இடத்தையும் வடபகுதியில் முதலிடத்தையும் இக்கல்லூரி பெற்றதென்பதே இதற்கு தகுந்த சான்று.

சிறந்த ஆசிரியர்களை ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் கழற்றி வந்த இந்த விந்தை அதிபர் ஏனைய கல்லூரிகளிலிருந்து சில காரணத்துக்காக விரட்டப்பட்ட அல்லது துரத்தப்பட்ட மாணவர்களின் வழிகாட்டியாக விளங்கியதே இவர் ஏனைய அதிபர்களில் இருந்தும் ஒரு தனித்துவமான, மனிதாபிமான மிக்கவராகத் திகழ்ந்தவர் என்பதை உறுதி செய்வதுடன் அவர் இன்று அல்ல என்றம் அந்த மாணவர்களின் மனித நேயம் கொண்டவர்களின் இதயங்களில் தெய்வமாக வைத்து பூஜிக்கப்படுவதற்கான காரணமாகும்.

தரம் குறைந்த மாணவர்களையும், வயது கூடியவர்களையும் ஏனைய பாடசாலைகள் ஏற்க மறுப்பவர்களையும் நீங்கள் மட்டும் ஏன் ஸ்கந்தாவில் அனுமதிக்கீறர்கள் என்று ஒரு முறை கேட்டதற்கு அவர் சொன்னார், 'இத்தகைய மாணவர்களால் இந்தக் கல்லூரியை மட்டுமே சிலவேளை சீர்குலைக்க முடியும். ஆனால் இவர்கள் வெளியே விட்டால் சமுதாயமல்லவா அழிந்துவிடும்' நான் இங்கு இருக்கும் வரை பாடசாலை பழுதாவதை எவராலும் தடுக்க முடியாது என்று மிக அழுத்தமாகத் தான் ஒரு புரட்சிகரமான சிந்தனையாளர் என்பதை வெளிப்படுத்தினார்.

கல்லூரியில் இருந்து வெளியேறும் மாணவர்களுக்கும், உத்தியோகம் பார்க்கச் செல்பவர்களுக்கும் அவர் நற்சான்றிதழ் வழங்கும் போது, எப்பொழுதும் தனது மேலதிகாரிகளுக்கு கீழ்ப்படிவும் விசுவாசமும் உள்ளவராகவே இருப்பார் He is always Loyal to his Superiers என்று எழுதிக் கைச்சாத்திடத் தவறுவதில்லை.

இது பற்றிக் கேட்ட பொழுது வெள்ளைக்காரனும் இதைத்தான் விரும்பினான். வேறெவனும் இதையே விரும்புவான். இந்த கீழ்ப்படிவு இருப்பதனால்தான் 'நல்ல இடங்களில் எல்லாம் தமிழன் இருக்கிறான்' என்றும் கலகலவென்று சிரித்துக் கொண்டே அவர் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் கூறியது இன்றும் நெஞ்சில் நிழலாடுகிறது, விளையாடுகிறது.

கல்லூரியில் பயிலும் ஒவ்வொரு மாணவனின் குடும்ப நிலை பற்றியும் அறிந்திருந்த அவர் மாணவரின் பெற்றோர்கள் பலரையும் நன்கு தெரிந்து வைத்திருந்ததும் அவரின் வெற்றியின் இரகசியங்களில் மிக முக்கியமானதாக அமைந்திருந்தது.

பாடசாலை நேரத்தில் மிகுந்த கண்டிப்பாக நடந்து கொள்ளும் இவர் கடுமையாக தண்டிப்பதிலும் பெயர் பெற்றவர். கல்லூரி நேரம் முடிந்ததும் அவர்தானா இவர் என்ற எண்ணும் வண்ணம் மிக அன்பாக நடந்து கொள்வார்.

நல்ல வெள்ளை வேட்டி அணிந்து, நஷனல் சால்வையுடன் கம்பீரமாக அவர் காட்சி தருவார். சிலவேளைகளில் தனது கரைபோட்ட (அநேகமாக பச்சை) சால்வையை தனது அலுவலக கதிரையில்விட்டு விட்டு வெளியில் சென்றுவிடுவார். வெளியே போய்வர எண்ணும் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள் கூட அந்த சால்வையை கண்டுவிட்டு, அவர் இங்கேதான் நிற்கிறார் என்று எண்ணி வகுப்புக்களுக்கு ஓடுவதையும் கண்டிருக்கிறோம்.

கல்வியில் மட்டும் அக்கறை காட்டாது, விளையாட்டுத் துறையிலும் சிறப்பாக உதைபந்தாட்டத்தில் மிகவும் அக்கறை காட்டியவர் ஒரேற்றர். விளையாட்டு வீரர்களில் விசேஷ கவனம் செலுத்தி, தனது வீட்டிலிருந்து விசேட உணவு தயாரித்து, அந்த வீரர்களுக்கு அளித்து உற்சாகம் ஊட்டிய பெரும் மனிதர் அவர். இதனால் தான் ஸ்கந்தா அகில இலங்கை ரீதியில் பாடசாலைகள் மட்டத்தில் உதைபந்தாட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றதுடன் உதைபந்தாட்டப் போட்டிகளில் அடுத்தடுத்து பலமுறை 'சம்பியன்' வெற்றிக் கேடயங்களைத் தட்டிக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தது.

ஆசிரியர்களின் குறைகளைக் கண்டித்தும் திறமைகளைப் பாராட்டியும் சிறந்த முறையில் வேலை வாங்குவதில் சமர்த்தரான அவர் எந்தவொரு ஆசிரியரின் உரிமைகளுக்காகவும் வாதாடுவார், போராடுவாரே தவிர எவரையும் எப்பொழுதுமே இடமாற்றம் செய்ததில்லை.

'ஒரேற்றர்' அதிபர் என்ற அதிகாரம் உள்ள ஒரு தனிமனிதனல்ல. அவர் ஒரு தத்துவம்-- ஒரு சக்தி -ஒரு குழு-ஒரு கூட்டம். இதனால் அவர் நாடளாவிய ரீதியில் மிகப் பெருமனிதனாக மதிக்கப்பட்டவர். இதனால் பல மாணவர்களுக்கு தனது தொலைபேசி மூலம் தொழிலும் பெற்றுக் கொடுத்தவர். எமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான இவரது மாணவர்கள் மிக உயர்ந்த பதவிகளில் மிக வாய்ப்பு வசதிகளோடு வாழ்கிறார்கள். அண்மையில் அவரது 90, 91ஆவது ஆண்டு நிறைவு விழாக்கள் இலண்டன் மாநகரிலும், கனடா போன்ற நாடுகளிலும் மிக விமரிசையாக நடைபெற்றுள்ளதையும் நாம் அறிவோம்.

ஒரேற்றர் ஸ்கந்தா அதிபராக பதவியேற்ற காலத்தில் எதிர்நீச்சலடித்தே அவர் பல சாதனைகளை நிலைநாட்டினார். இடது சாரி இயக்க ஈடுபாடுகளும் பரந்த மனப்பாங்கும் மனிதப் பண்புகளும் மிக்க அவர் ஸ்கந்தாவில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை அனுமதிப்பதில் அன்றைய கல்லூரி முகாமையாளரான டாக்டர் பி. சுப்பிரமணியத்துடன் (பி. எஸ்.) பல தடவைகள் போராடி இறுதியில் வெற்றி கண்டது பற்றி மிகப் பெருமிதத்தோடு கூறினார். அதுவே தான் செய்த மிகப் பெரிய சாதனை என்ற கூறி மகிழ்ந்ததை எண்ணவே நெஞ்சம் நெகிழ்கிறது.

1927 இல் யாழ்ப்பான முற்போக்கு இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிப காங்கிரஸின் ஸ்தாபக உறுப்பினரான இவர் அனறு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராகவிருந்த பேரறிஞர் ஹண்டி பேரின்பநாயகம், முன்னாள் செனெட்டர் பொ. நாகலிங்கம் போன்றோருடன் இணைந்து நீன்று தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம் போன்ற பல போராட்டங்களை நடத்தி சொல்லடியும் கல்லடியும் பெற்றவர். சிறுபான்மைத் தமிழருக்கு உரிமை வேண்டுமென்ற அவர்களுக்கான சிறுபான்மைத் தமிழர் மகா சபை ஆரம்பிக்கப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அவர்களின் மனித உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று போராடிய பெருந்தலைவரிவர். இவர்களில் சிலர் பின் தேசியரீதியில் இயங்கிவந்த 'சூரியமலர்' இயக்கத்துடனும் இணைந்து செயல்பட்டு வந்தனர் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

கல்விச் சேவையுடன் சமய சமூகப் பணிகளிலும் மிக ஈடுபாடு கொண்டவரான இவர் யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபலமானதும் இவரின் குலதெய்வமான மருதடி விநாயகர் ஆலயம், பல்லாண்டு காலமாக தனிமனித சொத்தாக இருந்து வந்ததை எதிர்த்து வெற்றிகண்டவர். இவரின் ஆலோசனையின் பேரில் நீதிமன்றத்தில் நடந்த வழக்கொன்றின் மூலம் இந்த ஆலயம் பொதுமக்களின் சொத்தாக்கப்பட்டது பற்றி இப்பகுதி இந்துக்கள் மத்தியில் மிகுந்த மகிழச்சியும் பாராட்டும் இவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கின் மூலம் 'பிள்ளையார் திடல்' என்ற இக்காணி 1856ஆம் ஆண்டில் விக்டோறியா மகாராணியாரால் சுவாமிநாத முதலியார் குமாரசிங்கம் என்பவருக்கு நம்பிக்கைச் சொத்தாக எழுதிக் கொடுத்திருந்த உறுதியும் இக்கோவில் பொதுச் சொத்துத்தான் என்பதை நிரூபிக்கக் கூடிய மற்றொரு உறுதியும் கண்டு பிடிக்கப்பட்டது பற்றி அவ்வாலயத்தின் தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவர் சிவசம்பு குறிப்பிட்டிருக்கிறார்.

இயல்பாகவே நகைச்சுவை ததும்பப் பேசும் ஆற்றல் மிக்கவரான ஒரேற்றர் அகில இலங்கை ஆசிரியர் சங்கப்பிரதிநிதியாக சீனா, மற்றும் வெளிநாடுகள் சிலவற்றுக்குச் சென்று திரும்பியபோது அன்றைய மாணவர் தலைவன் என்ற முறையில் நானும் வேறு சில நண்பர்களும் சுன்னாகம் புகையிரத நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்றிருந்தோம். புகையிரதத்தில் இருந்து இறங்கிய அவரை முதன் முதலாக கால்சட்டையுடன் கண்டவுடன்

